973

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

19 FEB 1931

Vol 3] 1930 ஞு நவம்பர் மீ 13உ [No. 45.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 881
2. குறுந்தொகை (பாட்டு 309—323)
K. இராமரத்நம் ஐயர் B.A. 883
3. அப்பர் (சிற்பமும் உருவ சாஸ்திரமும்)
E. N. தணிகாசலமுதலியார் B.A. B.L. 887
4. நம்மாழ்வார் வைபவம் (?ம் பத்து 3ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 889
5. தமிழ்ப்பாடம் (இலக்கணம்) 891
6. மனித சுகமும் தத்துவ ஞானமும்
புரபஸர். இராதாகிருஷ்ணன் 892
7. தனிப்பாடல்—நாமகள் ஆசைப்பத்து
நவாலி க. சோமசுந்தரம் பிள்ளை 894
8. கம்ப ராமாயணம் (மந்தரை சூழ்ச்சிப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 895
9. வர்த்தமானம் 899

கலாநிலயம்

189129

அரக்கராற்றல்.

இருப்பதே கருமமாயின் இறப்பதே மேலதன்றோ என்னச் சிலர் நினைக்கலாவதும் மன்பதைத் தொகுதியின்பால் பரிவினுற் புகுமொரு எண்ணமே யன்றிக் கொடுமைமிகு சாபமெனக் கொள்ளவேண்டா. உணவின் தகுதியாலும் உறையும் இடத்தாலும் உயிர்க்கும் காற்றினாலும் மெய்வலிப்பயிற்சியாலும் நோயின்றிப் பல்லாண்டு மாந்தர் நிலைத்திருக்குமாறு முறைகள் பற்பல முயலுவார் தொகை இக்காலம் நாளுக்குநாள் மிகுகின்றது. அன்னவர், நோயற்ற வாழ்வே வாழ்வு என்னும் மூதுரையை நெடிது கூறி நிமிர்ந்து நிற்பர். இவைகளால், நினைத்தபடி திண்ணிய உடல்தான் எத்துணைத் தேறுகின்றதெனும் ஐயம் ஒருபுறமிருக்க, உரைக்கின்ற அந்தப் பழமொழியின் மெய்ப்பொருளை உட்கொண்டாரவரென எண்ணுதற்கும் இடமில்லையே. வர்த்தமானப்பத்திரிகைகளின் உட்புற இதழ்கள் பொதுஜனமனநிலையின் தன்மைக்குமாத்திரம் அடையாளமாக, அவைகளின் புறஇதழ்கள், ஜனங்களின் பனம் பெய் ஆகிய இரண்டும் இருக்கும் பரிசு இன்னதென்பதைக் காணவல்லார்க்கு நன்கு காட்டிநிற்கின்றன. விரிந்தெங்கும் பரக்கின்ற விளம்பரங்களின் வாய்பாட்டையே இதனுற் குறிக்கின்றோம். மனைவாழ்க்கையின் மர்மங்கள், இல்லறவாழ்க்கையின் ரகசியங்கள், இல்லறஇன்ப சாஸ்திரங்கள், முத்தத்தின் மர்மங்கள், வசிய கவசங்கள், சிட்டுக்குருவி லேகியங்கள், இன்னும் இந்த நூல்களும் மருந்துகளும் மனிதரின் மனதை எந்த எண்ணங்கள் சூடிகொண்டிருக்கின்றன வென்று உணர்த்துகின்றனவோ அந்த எண்ணங்களுக்குச் சார்பான பல சாதனங்களும், ஒருவகை.மற்றோர்வகை, முன்னவைகளின் நினைவு முதிர்ந்துமுதிர்ந்து புரிந்த செய்கைகளால் வருந்துகின்ற நோய்களுக்கும் மற்றும் பல வியாதிகளுக்கும் மருந்துகள். நூறுநோய்க்கு ஒரு மருந்து, ஒரு நோய்க்கு நூறுமருந்து; இப்படியே விரிகின்ற விளம்பரங்களின் வேகம், நாளுக்குநாள் தளர்ந்து வருகின்ற உடல்நிலையை உண்மைப்படுத்துகின்றதேயன்றி வேறன்று. இத் தளர்ச்சிநிலையைப் போக்கத்தான் முயலுகின்றோ மென்பர், உடற்பயிற்சி உணவுமுறை கர்ப்பத்தடை முதலியவைகளில் ஊக்கமுடையோர். எற்றுக்கு இவைகளை முயலவேண்டுமென்ன அவர்களை வினவினால், நோய்நிலையின் துயரெல்லாம் நெடிதுகூறி அயல்நாட்டோர் ஆயுளையும் அளந்துகாட்டி நோயற்றவாழ்வே வாழ்வு என்னும் மூதுரையையேனும், அவ்வளவும் தமிழ் அறியாதார், அப்பொருள்தரத் தம்மொழி சிலவேனும் செப்பலாவார்.

ஆம். இக்காலம் வாயாளப்பெறும் எல்லா மூதுரைகளையும்போல் இதனிலும், உயிர்நிலையாய ஒன்றை மறந்தார். வேண்டப்படுவது நோயற்ற வாழ்வே யன்றி நோயற்ற யாக்கை யன்று. "நோயற்ற யாக்கையே யாக்கை" என்பது மூதுரையாயின் இத்தகைய முயற்சிகள் ஒருகால் அதற்கு இணங்கலாம். வாழ்க்கைக்கன்றோ நோயால் இடையூறு நேராமல் காக்கவேண்டுமென்பது கருத்து. மற்று, அவ்வாழ்வின் கருவியாய உடலைக் காக்கவேண்டாவோ என்னும் வினவினிலும்

முற்றிலும் உண்மையில்லாமற் போகவில்லை. ஆயினும் அத்தகைய வினைவைத் தூண்டுவது ஆங்கிலமனப் பயிற்சியின் செய்கையாகும். A sound mind in a sound body என்னும் ஓர் சொற்றொடர் ஆங்கிலத்தில் விரவிவருகின்றது. "பழுதற்ற சரீரத்தில் பழுதற்ற மனம்" என்பது அதன் பொருள். இவ்வண்ணம் உடலையும் மனத்தையும் வெவ்வேறாகப் பிரித்து விவகரிப்பது ஆங்கிலவழிகளுக்கு அடுத்ததாகலாம். மற்று, தமிழ்மரபு தழைத்தோர் செம்மை நிலையோ உட்கொள்ளக் கற்றிருப்பது வாழ்வு என்னும் சித்திரத்தின் முழுத்தொகுதியேயாம். நேர்மை, நாகரிகம் நல்லொழுக்கம், பக்தி, பொருள், அருள், உற்றார், சுற்றம் யாவும் ஒருங்குசேர்ந்து மேவுமோர் நிலைமையை வாழ்வு என்னும் சொல்லால் தமிழர் வழங்கினர். அத்தகைய வாழ்வை ஒருவன் எய்தி அதனால் எல்லாரும் எங்கும்இன்புற்றிருக்கும்வண்ணம் அமைந்திருக்குங்கால் அவ்வமைதிக்கு உடல்நோயால் இடையூறு ஒன்றும் வரலாகாது என்பதே இம்மூதுரையின் கருத்து என்பது இதனால் புலப்படும். இந்தப்படி, ஈதல் இசைபட வாழ்தல் இதுவல்லது ஊதியமில்லை உயிர்க்கு, என்ற பொய்யாமொழிக் கிணங்கியவொரு உண்மையாய ஊதியமுடைய உயிர்வாழ்க்கையில் படியவேண்டும் என்பதொன்றே பொதுஜனங்களின் நோக்கமா யிருந்தாலன்றே அந்நோக்கம் இனிது நிறைவேறுமாறு யாக்கையைப் பழுதுதீர்த்துப் போற்றுதல் வேண்டும்.

இக்காலப் பொதுஜனங்களின் நோக்கம், ஈந்து இசைபடுகின்ற வோர் வாழ்வினையே நாடிநிற்கின்றதென்றேனும்; வர்த்தமானபத்திரிகைகளும் பொதுஜனத்தலைவர்களும் அரசியல்வாதிகளும் சீர்திருத்தகாரர்களும் வகுப்புவாரிப்பிரதிநிதிகளும் இன்னும் இத்தகைய இனத்தினர் "பிரசாரங்களேனும்" அந்நோக்கத்தில் நாட்டவேண்டுமென்ற ஊக்கமுடையனவென்றேனும்; எண்ணுதற்கு எள்ளளவும் இடமில்லாவரை நோயற்றயாக்கையினால் என்செய என்று யாம் இடைவிடாது அயிர்த்தாற்றான் அமையாதோ. ஸ்திரீவசிய கவசங்கள் விலையாவதற்கோ வாடாத மேனிவேண்டும். வர்த்தமானபத்திரிகைகள் வாசிப்பதற்கோ கூசாத கண்கள்வேண்டும். வழக்காடித் திரிவதற்கோ திண்ணிய உடல் வேண்டும். வர்த்தகங்கள் செய்வதற்கோ வன்மைவேண்டும். தேர்தல்களில் நடமாடி விரைவதற்கோ நல்ல கால்கள்வேண்டும். இவைகளால் ஊதியந்தான் ஒன்றும் இல்லையே! ஏதமே எஞ்சுகின்றது. ஆயின் இவ்வேதங்கள் வாடாமல் வளர்வதற்கே மெய்வலி நாடுகின்றாரென்றால் நல்லோர் சிலர் நகைபாரோ! ஆதலின் உடலுக்குரிய முறைகளை உயரவுபர வளர்ப்பதால் உறுபொருளொன்றுமில்லை. காமக்குரோதலோப மோக மத மாச்சர்யாதிகளில் மாந்தர்மனம் உழலும்வரை ஊனுடைய உடனிலை ஒருபோதும் கைகூடாது-கைகூட வேண்டவும்வேண்டா. வாய்மையை விளம்புவதெனின், கூடாதிருப்பதே யாவர்க்கும் நலமாகுமெனக் கூறல் வேண்டும். தூய்மைபால் இன்புற்றுத் திகழ்கின்ற மனத்திற் சிறந்ததோர் மருந்தும் பயிற்சியும் உடலின்செம்மைக்கு இல்லையென்னும் தத்துவத்தை எல்லோரும் உணர்வாராயின் இக்கால மானுடமுயற்சி முற்றிலும் வேறுபதுறைகளில் பயிலலாகும். மற்று, இருக்கத்தானிருந்தாலும், நற்பயன் தரும்படி பயிலக்கல்லாக் கருவியொன்றை மக்களுக்கு எய்துவிப்பது கொடுமை சில விளைவதற்கே காரணம் ஆயின் ஆகுமேயல்லாது நன்மையின்பால் நண்ணுவித்தல் அருமை.

வயதின்எல்லை வாழ்க்கையின் அளவுகோல்ஆகாது. நன்கு வாழ்ந்தவனே நீண்ட நாள் இருந்தவனாவான். தன் மகற்கு ஆண்டு பதினாறே அமையும் என வேண்டிய மிருகண்டுமுனிவர் இதனை அறிவார். மக்களில் மார்க்கண்டேயர் அனையவர்களே விதியின் வந்த கூற்றையும் புறங்காணும் ஆற்றலர் ஆவாரென் றறையவேண்டுமோ. அவ் வாற்றலோவெனின், உடற்பயிற்சி முறைகளாலும் உப்பில்லா உணவினாலும் இவையனைய பிற சாதனங்களாலும் எய்தியதோர் மெய்வலியும் சுகாதார முறைகளும் தந்ததால் வந்ததன்று. செம்மையை நினைக்கின்ற சான்றோர்க்கே உரியதோர் அரிய நிலை அது. மாசற்ற மனத்தூய்மையின் மாண்புடையோர்க்கு உடலின் நல்லமைப்பு உரையாமலே வந்தெய்தும். இதனையே வேறுவகையிற் கூறின்—வேண்டுவது வாழ்க்கையாகுங்கால், உடலும் உணவும் உடையும் தூரத்தே விலகிநின்று, மாசற்ற மனத்தின் பணிகளை ஏவியவாறு இயற்றுதற்கு யாதும் இடும்பை செய்யா. மற்று, வேண்டுவது யாக்கையேயாயின் அதுவுமே எஞ்சாது எல்லாம் அழிவது திண்ணம். இக்கால மாநுடச் சுமையாகிய யாக்கை அழிவடைந்துவருவதைக் காண்பார் சிலர் பரிவின் மிகுதியால் அதற்குரிய காரணத்தை உணராமல் அவ் யாக்கையைப் போற்றுதற்கியன்ற சாதனங்கள் எல்லாம் சாதித்துவிடுமென மதித்துப் பல்வேறு இயக்கங்களில் முயலலாகின்றனர். மனத்தின் இழிவே யாக்கையின் அழிவிற்குக் காரணம் என்பதை, உரைத்தபின்னேனும், உணரக்கூடியவர் இவ்வினத்தவரில் எத்தனைபேர் இருக்கின்றனர் எனத் துணிந்துரைத்தல் அருமையாகின்றது. மற்று, நோயற்றயாக்கை வேண்டுமெனின், பொய்வளரும் நெஞ்சினர்களால் புகலப்பெறும் நோக்கங்களினின்று மாநுட மனத்தை விலக்கி, மெய்விளங்கவருதற்குரிய வாழ்க்கையின்பால் நிலைத்த நாட்டமுடையவராதற்கு உதவவல்லவைகளையே கைப்பற்றிக் கொண்டாடும் இயற்கையில் யாவும் தங்குமாறு முயலல் வேண்டும்.'

அன்னவாறு செய்யவேண்டுமென்ற போலி வேடங்கள் புனைந்தாரையுங் கூட எங்கும் காண்கிலம். இவ் யாக்கையைப் போற்றிப் போற்றி என் பெற்றோம்? இறைவனது அருளுக்கு ஆளாகவேண்டுமே என்று நினையாது கழிகின்ற நாளெல்லாம் மனிதர் மாளாத மாபெரும் பாவத்தையே சேர்த்துக்கொள்கின்றனர். ஆதலாற்றான் நீண்டஆயுள் தமக்கு இருப்பதொன்று மட்டுமே கருமமென்று நினைப்பாரெல்லாம் இப்பாவப் பெரும்பொதியை மேன்மேலும் சுமத்திக்கொள்ளாமல் கடிதின் கழிவதேமேல் என்ன இக்கட்டுரையின் துவக்கத்தில் கூறலாயினோம்.

அருளுக்கு ஆளாகாமல் அவலமாக்கும் வழியிலே புகுந்து நடப்பதன்பொருட்டு நீண்டஆயுள் வேண்டுவதற்கு இணையாக, அவ் வவலச்செய்கைகள் இடையூறின்றி நடைபெறும்பொருட்டே இக்காலம் குறைவற்ற செல்வமே செல்வம் என்னும் அம்மூதுரையின் மறுபாகம் கொண்டாடப்பெறுகின்றது. இரப்போர்க்கு இல்லையென எவ்வாறு உரைப்பதெனும் கருணையாலோ இந்தியர் தம் வறுமையை வெறுக்கின்றனர்; செல்வமிக்கவரென மதிக்கப்படும் அயல்நாட்டார்தம் செல்வத்தைப் பாராட்டுகின்றனர். இரண்டுமில்லையே. வரங்கிடந்து அரக்கர் பலர் மெய்வலியும் ஆயுளும் அளவற்ற செல்வமும் வேண்டியவாறும் இது. மற்றவரை அழிப்பதற்கும் தாமே அழிவதற்கும் கைக்கொண்ட கருவியேயாய் இவை முடிந்தன. "அரக்கரே அனைய ஆற்றல் யாவர்க்கும் இருத்தல் வேண்டும், ஆனால் அரக்கரைப்போல் அவ் வாற்றலை ஒருவரும் உபயோகப்படுத்தலாகாது" என்றோர் வாசகம் ஆங்கிலத்தில் வழங்குவதுண்டு. என்னிது விபரீதம்.

19 FEB 1931

உள்ளுறை;—வலவன் தனது குதிரையின் அயர்ச்சியைக் கடல்நீராலன்றி, ஓரை மகளிர் காட்டிய வாலருவி நீரால் போக்கியாங்குத் தலைமகனும் நீர்மையற்றக் களவொழுக்காலன்றிப் பாங்கி முதலாயினர் தெருட்டிக் காட்டியவாறு நேர்மையான வதுவையாற்றித்தனது நோய்மலி துயரத்தைப் போக்குவானாக என்று தலைமகனைத் தலைமகள் உவமைமுகத்தால் வேண்டியதாம்.

மதுரைக் கண்டாகத்தனார்] 317 [குறிஞ்சி

தலைமகனது பிரிவை ஆற்றாது வருந்திய தலைமகளைத் தோழி வற்புறுத்தித் தேற்றியது.

புரிமட மரையான் கருநரை நல்லேறு
தீம்புளி நெல்லி மாந்தி, அயலது
தேம்பாய் மாமலர் நடுங்க வெய்துயிர்த்
தோங்கு மலைப் பைஞ்சுனைப் பருகு நாடன்
வடபுல வாடைக் கழிமழை
தென்புலம் படருந் தண்பனி நாளே.

(உரை). விரும்பத்தக்க இளமைவாய்ந்த மரைமானும், பெரிய வெள்ளையேறும் இனிய புளிப்பையுடைய நெல்லிப் பழத்தை அயின்று, பிறகு வெய்துயிர்த்துப் பக்கத்திலுள்ள உயர்ந்தமலையின் சுனையிலுள்ள நீரை, அதிலுள்ள பெரிய மலர்கள் அசைந்து நடுங்கும்படி, குடிக்கும் மலைநாடன், மிகுதியாகப் பெய்த மழை தென்திசைக்கு நீங்கிய, குளிர்ந்த வடதிசையிலிருந்து வந்த வாடைக்காற்றோடு கூடிய பனிக்காலத்தில் நம்மை விட்டுப்பிரிந்திருக்க அமைவாரோ? (ஒருபோதும் அமையார்; நீ வருந்தாதேகொள்.)

புரிமடம்: புரிதல் - விரும்புதல். நரை- வெண்மை.மற்று, ஏ - அசை.

உள்ளுறை:—மரைமான் ஆணும் பெண்ணுமாய் நெல்லிக் கனியைத் தின்று பைஞ்சுனை நீரைப்பருகித் துன்பற்று இன்புற்று இருந்தாற்போலத் தலைமகனும் அவளைவரைந்து கொண்டு பிரியாதுடனிருந்து விரும்பியவற்றை விரும்பியாங்கு நுகர்ந்து இன்புற்றிருப்பான் என்றுணர்த்தியதாம்.

முன்பனிக்காலத்தில் மேகங்கள் தென்றிசை நோக்கிப் பெயர்தலை,

வயங்குகதிர் கரந்த வாடை வைகறை
விசும்புரி வதுபோல் வியலிடத் தொழுகி
மங்குல் மாமழை தென்புலம் படரும்
பனியிருங் கங்குல்—(24)

என்ற அகப்பாட்டான் அறிக.

அம்மூவனார்] 318 [நெய்தல்

தலைமகன் சிறைப்புறத்தானாக, அவன் கேட்பத் தலைமகள் தோழிக்கு உரைத்தது.

எறிதருக் கலித்த இலங்குநீர்ப் பரப்பின்
நறுவீ ஞாழலொடு புன்னை தாஅய்
வெறியயர் களத்தினிற் றோன்றுந் துறைவன்
குறியா னாயினுங் குறிப்பினும், பிறிதொன்று
அறியார்க் குரைப்பலோ யானே; வேய்கவிப்
பணையெழில் மென்றோள் அணைஇய வந்நாள்
பிழையா வஞ்சினஞ் செய்த
களவனுங் கடவனும் புணைவனுந் தானே.

(உரை.) வெட்டியெறிந்த மரங்கள் மீண்டுந் தழைத்து விளங்கும் கடற்கானலில் ஞாழலின் வாசனை பொருந்திய பூவும் புன்னைப்பூவும் பரந்து வெறியாட்டயருங் களம் போலத் தோன்றுங் கடற்சேர்ப்பனாகிய நமதுதலைமகன் வரைந்து கொள்ளலைக் கருதியுள்ளானாயினும், இலனாயினும் இம்மறையை அறியாதவரிடத்து நானே சொல்வேனோ? சொல்லேன். இந்த மூங்கிலினழகைக்கொண்ட மென்மையான எனது தோள்களை தழுவிக்கூடிய அந்நாள் தவறாத சூளுரைமொழிந்த வஞ்சகனும், (தன்மொழியைக்காக்கும்) கடப்பாடுடையவனும், துன்பக்கடலினின்று என்னைக் கரையேற்றும் புணைபோன்றவனுமாகிய அவன் தானே அறிந்து வந்துமணந்து என்னலத்தை சூடிக்கொள்க.

தரு - மரம். தாஅய் - பரந்து. வெறி - வெறியாட்டு. பிறிதொன்று - களவு, கற்பு என்னுங் கைகோளிரண்டினில் களவொழுக்கத்தின் வேறாய கரணமொடு புணர்ந்த கற்பொழுக்கம். வேய்க தானே, எனக்கூட்டுக. வேய்க, இப்பணை எனப்பிரிக்க. 'வேய் கவிப் பணைத்தோள் என்று ஒரு தொடராகக்கொண்டு, மூங்கிலையும் தலைகவியச்செய்யும் பணைந்த தோள், என்றலுமொன்று; வேய்கவிப்பு அணை, எனப் பிரித்து, வேயின்வளைவு பொருந்தியதோள், என்றுரைத்தல் அத்துணைச் சிறவாமை ஓர்ந்தறிக; 'வேய்கவிற் பணைத்தோள்' என்று பாடமோதுவாருமுளர். 'அணைஇய - அணைந்த.

தாயங்கண்ணனார்] 319 [முல்லை

குறித்த கார்காலத்தில் மழையோடு மாலைப்பொழுது வரக்கண்டு பெரிதும் பேதுற்ற சிழத்தித் தன்னைத் தேற்றுந் தோழிக்கு வன்புறை எதிரழிந்து சொல்லியது.

மானேறு மடப்பிணை தழீஇ மருள்கூர்ந்து
கான நண்ணிய புதன்மறைந் தொடுங்கவும்,
கையுடை நன்மாப் பிடியொடு பொருந்தி
அமையணி மருங்கின் மலையகஞ் சேரவும்,
மாலை வந்தன்று மாரி மாமழை;
பொன்னேர் மேனி நன்னலஞ் சிதைத்தோர்
இன்னும் வாரா ராயின்
என்னும், தோழி, நம் மின்னுயிர் நிலையே.

(உரை). கலைமான் தனது மடப்பம்பொருந்திய பிணையைத் தழுவி மிகவும் மனங்கலங்கி முல்லைக்கானத்தைச் சார்ந்த புதல்களிலே மறைந்தொடுங்கித் தங்கும்படிக்கும், களிற்றியானை பிடியுடன் சேர்ந்து மூங்கில்கள் வரிசையாக வளர்ந்த சாரல்களையுடைய மலையின் முழைகளையடைந்து தங்கும்படிக்கும் மாலைப்பொழுதிலே மாரிக்காலத்துமாமழை வந்தது; எனது பொன்போன்ற மேனியின் அழகைக் கெடுத்தவர் இம்மாரிக்காலத்து மாலையினும் வாராவிடின், நமது இனியவுயிர் நிலைத்திருத்தல் எவ்வாறு அமையும்?

அமை - மூங்கில். அணி - வரிசை. அமையை அணிந்த என்றுமாம். மாலை - மாலைப்பொழுதின்கண், என ஏழனுருபு விரித்து, 'வந்தன்று' என்பதற்கு 'மழை' என்பதை எழுவாயாக்குக. பொன்னேர் - பொன்நேர்; பொன் ஏர் எனவும் பிரிக்கலாம். என்னும் - எவனும், எப்படியாகும்.

தும்பி மோசிகீரனார்] 320 [நெய்தல்

அலரஞ்சி ஆற்றாத் துயருற்ற தலைமகள் சிறைப்புறத்து வந்து நின்ற தலைமகன்கேட்பத் தோழிக்குச் சொல்லியது.

பெருங்கடற் பரதவர் கொள்மீ னுணங்கலின்
அருங்கழிக் கொண்ட இறவின் வாடலொடு,
நிலவுநிற வெண்மணல் புலவப் பலவுடன்
எக்கர்தொறும் பரிக்குந் துறைவனொடொருநாள்
நக்கதோர் பழியு மிலமே; போதவிழ்
பொன்னிணர் மரீஇய புள்ளிமிழ் பொங்கர்ப்
புன்னையஞ் சேரி யிவ்வூர்
கொன்னலர் தூற்றுங் கொடுமை யானே.

(உரை). பொன்னிறமான மலர்ந்த பூங்கொத்துக்களைச் சேர்ந்த வண்டுகள் ஒலிக்குங் கிளைகளையுடைய புன்னைமரங்கள் செறிந்த சேரியாகிய இவ்வூர் வீண் வசைமொழி கூறுங் கொடுஞ்செயலால், நிலவைப்போன்ற வெண்ணிறத்

உள்ளுறை;—வலவன் தனது குதிரையின் அயர்ச்சியைக் கடல்நீராலன்றி, ஓரை மகளிர் காட்டிய வாலருவி நீரால் போக்கியாங்குத் தலைமகனும் நீர்மையற்றக் களவொழுக்காலன்றிப் பாங்கி முதலாயினர் தெருட்டிக் காட்டியவாறு நேர்மையான வதுவையாற்றித்தனது நோய்மலி துயரத்தைப் போக்குவானாக என்று தலைமகனைத் தலைமகள் உவமைமுகத்தால் வேண்டியதாம்.

மதுரைக் கண்டாகத்தனார்] 317 [குறிஞ்சி

தலைமகனது பிரிவை ஆற்றாது வருந்திய தலைமகளைத் தோழி வற்புறுத்தித் தேற்றியது.

புரிமட மரையான் கருநரை நல்லேறு
தீம்புளி நெல்லி மாந்தி, அயலது
தேம்பாய் மாமலர் நடுங்க வெய்துயிர்த்
தோங்கு மலைப் பைஞ்சுனைப் பருகு நாடன்
வடபுல வாடைக் கழிமழை
தென்புலம் படருந் தண்பனி நாளே.

(உரை). விரும்பத்தக்க இளமைவாய்ந்த மரைமானும், பெரிய வெள்ளையேறும் இனிய புளிப்பையுடைய நெல்லிப் பழத்தை அயின்று, பிறகு வெய்துயிர்த்துப் பக்கத்திலுள்ள உயர்ந்தமலையின் சுனையிலுள்ள நீரை, அதிலுள்ள பெரிய மலர்கள் அசைந்து நடுங்கும்படி, குடிக்கும் மலைநாடன், மிகுதியாகப் பெய்த மழை தென்திசைக்கு நீங்கிய, குளிர்ந்த வடதிசையிலிருந்து வந்த வாடைக்காற்றோடு கூடிய பனிக் காலத்தில் நம்மை விட்டுப்பிரிந்திருக்க அமைவாரோ? (ஒரு போதும் அமையார்; நீ வருந்தாதேகொள்.)

புரிமடம்: புரிதல் - விரும்புதல். நரை- வெண்மை.மற்று, ஏ - அசை.

உள்ளுறை:—மரைமான் ஆணும் பெண்ணுமாய் நெல்லிக் கனியைத் தின்று பைஞ்சுனை நீரைப்பருகித் துன்பற்று இல்புற்று இருந்தாற்போலத் தலைமகனும் அவளைவரைந்து கொண்டு பிரியாதுடனிருந்து விரும்பியவற்றை விரும்பியாங்கு நுகர்ந்து இன்புற்றிருப்பான் என்றுணர்த்தியதாம்.

முன்பனிக்காலத்தில் மேகங்கள் தென்றிசை நோக்கிப் பெயர்தலை,

வயங்குகதிர் கரந்த வாடை வைகறை
விசும்புரி வதுபோல் வியலிடத் தொழுகி
மங்குல் மாமழை தென்புலம் படரும்
பனியிருங் கங்குல்—(24)

என்ற அகப்பாட்டான் அறிக.

அம்மூவனார்] 318 [நெய்தல்

தலைமகன் சிறைப்புறத்தானாக,அவன் கேட்பத் தலைமகள் தோழிக்கு உரைத்தது.

எறிதருக் கலித்த இலங்குநீர்ப் பரப்பின்
நறுவீ ஞாழலொடு புன்னை தாஅய்
வெறியயர் களத்தினிற் றோன்றுந் துறைவன்
குறியா னாயினுங் குறிப்பினும், பிறிதொன்று
அறியார்க் குரைப்பலோ யானே; வேய்கவிப்
பணையெழில் மென்றோள் அணைஇய வந்நாள்
பிழையா வஞ்சினஞ் செய்த
களவனுங் கடவனும் புணைவனுந் தானே.

(உரை.) வெட்டியெறிந்த மரங்கள் மீண்டுந் தழைத்து விளங்கும் கடற்கானலில் ஞாழலின் வாசனை பொருந்திய பூவும் புன்னைப்பூவும் பரந்து வெறியாட்டயருங் களம் போலத் தோன்றுங் கடற்சேர்ப்பனாகிய நமதுதலைமகன் வரைந்து கொள்ளலைக் கருதியுள்ளானாயினும், இலனாயினும் இம்மறையை அறியாதவரிடத்து நானே சொல்வேனோ? சொல்லேன். இந்த மூங்கிலினழகைக்கொண்ட மென்மையான எனது தோள்களை தழுவிக்கூடிய அந்நாள் தவறாத சூளுரைமொழிந்த வஞ்சகனும், (தன்மொழியைக்காக்கும்) கடப்பாடுடையவனும், துன்பக்கடலினின்று என்னைக் கரையேற்றும் புணைபோன்றவனுமாகிய அவன் தானே அறிந்து வந்துமணந்து என்னலத்தை சூடிக்கொள்க.

தரு - மரம். தாஅய் - பரந்து. வெறி - வெறியாட்டு. பிறிதொன்று - களவு, கற்பு என்னுங் கைகோளிரண்டினில் களவொழுக்கத்தின் வேறாய கரணமொடு புணர்ந்த கற்பொழுக்கம். வேய்க தானே, எனக்கூட்டுக. வேய்க, இப்பணை எனப்பிரிக்க. 'வேய் கவிப் பணைத்தோள் என்று ஒருதொடராகக்கொண்டு, மூங்கிலையும் தலைகவியச்செய்யும் பணைந்த தோள், என்றலுமொன்று; வேய்கவிப்பு அணை, எனப் பிரித்து, வேயின்வளைவு பொருந்தியதோள், என்றுரைத்தல் அத்துணைச் சிறவாமை ஓர்ந்தறிக; 'வேய்கவிற் பணைத்தோள்' என்று பாடமோதுவாருமுளர். 'அணைஇய - அணைந்த.

தாயங்கண்ணனார்] 319 [முல்லை

குறித்த கார்காலத்தில் மழையோடு மாலைப்பொழுது வரக்கண்டு பெரிதும் பேதுற்ற சிழத்தித் தன்னைத் தேற்றுந் தோழிக்கு வன்புறை எதிரழிந்து சொல்லியது.

மானேறு மடப்பிணை தழீஇ மருள்கூர்ந்து
கான நண்ணிய புதன்மறைந் தொடுங்கவும்,
கையுடை நன்மாப் பிடியொடு பொருந்தி
அமையணி மருங்கின் மலையகஞ் சேரவும்,
மாலை வந்தன்று மாரி மாமழை;
பொன்னேர் மேனி நன்னலஞ் சிதைத்தோர்
இன்னும் வாரா ராயின்
என்னும், தோழி, நம் மின்னுயிர் நிலையே.

(உரை). கலைமான் தனது மடப்பம்பொருந்திய பிணையைத் தழுவி மிகவும் மனங்கலங்கி முல்லைக்கானத்தைச் சார்ந்த புதல்களிலே மறைந்தொடுங்கித் தங்கும்படிக்கும், களிற்றியானை பிடியுடன் சேர்ந்து மூங்கில்கள் வரிசையாக வளர்ந்த சாரல்களையுடைய மலையின் முழைகளையடைந்து தங்கும்படிக்கும் மாலைப்பொழுதிலே மாரிக்காலத்துமாமழை வந்தது ; எனது போன்போன்ற மேனியின் அழகைக் கெடுத்தவர் இம்மாரிக்காலத்து மாலையினும் வாராவிடின், நமது இனியவுயிர் நிலைத்திருத்தல் எவ்வாறு அமையும்?

அமை - மூங்கில். அணி - வரிசை. அமையை அணிந்த என்றுமாம். மாலை - மாலைப்பொழுதின்கண், என ஏழனுருபு விரித்து, 'வந்தன்று' என்பதற்கு 'மழை' என்பதை எழுவாயாக்குக. பொன்னேர் - பொன்நேர்; பொன் ஏர் எனவும் பிரிக்கலாம். என்னும் - எவனும், எப்படியாகும்.

தும்பி மோசிகீரனார்] 320 [நெய்தல்

அலரஞ்சி ஆற்றாத் துயருற்ற தலைமகள் சிறைப்புறத்து வந்து நின்ற தலைமகன்கேட்பத் தோழிக்குச் சொல்லியது.

பெருங்கடற் பரதவர் கொள்மீ னுணங்கலின்
அருங்கழிக் கொண்ட இறவின் வாடலொடு,
நிலவுநிற வெண்மணல் புலவப் பலவுடன்
எக்கர்தொறும் பரிக்குந் துறைவனொடொருநாள்
நக்கதோர் பழியு மிலமே; போதவிழ்
பொன்னிணர் மரீஇய புள்ளிமிழ் பொங்கர்ப்
புன்னையஞ் சேரி யிவ்வூர்
கொன்னலர் தூற்றுங் கொடுமை யானே.

(உரை). பொன்னிறமான மலர்ந்த பூங்கொத்துக்களைச் சேர்ந்த வண்டுகள் ஒலிக்கும் கிளைகளையுடைய புன்னை மரங்கள் செறிந்த சேரியாகிய இவ்வூர் வீண் வசைமொழி கூறுங் கொடுஞ்செயலால், நிலவைப்போன்ற வெண்ணிறத்

தைக்கொண்ட மணற்குவியல்களின் மீதெல்லாம் வலைஞர் கடலிற்கொண்ட பெருமீன்களின் உணங்கலையும், நீரற்ற கழியிற்கொண்ட இறாமீனின் உணங்கலையும், வேறு பல மீன்களினுணங்கலையும் புலால்நாற்றமுறத் தாங்கும் கடற் சேர்ப்பனோடுகூடி இன்புற்றுமகிழ்தலாகிய பழிச்செயலை ஒருகாளேனும் நாம் செய்திலமே.

உணங்கல், வாடல் - வெயிலில் உலர்த்திய பொருள். புலவ - (புலால்நாற்றம்) வீச. 'புல்ல' என்பதுமொரு பாடம். பலவுடன் - வேறு உணங்கல் பலவற்றுடன். பரிக்கும் -தாங்கும், சுமக்கும். நக்கது - மகிழ்ந்தது; இங்கு மகிழ்ச்சிக்குக்காரணமான கலவியைச்செய்தது. பழி - களவுப் புணர்ச்சி. புள் - வண்டு. பொங்கர் - மரக்கொம்பு, கிளை. சேரி - பரதவரூர். கொன் - பயனற்ற, வீணான; அஞ்சத்தக்க என்றுமாம். கொடுமையான் - கொடுமையால்.

வெண்மணலெக்கர்தோறும் உணங்கலின் வாடலொடு பலவுடன் புலவப் பரிக்குந் துறை, என்றும்; கொடுமையான் றுறைவனொடு நக்கதோர் பழியுமிலம், என்றுங் கூட்டுக.

321

குறிஞ்சி

நொதுமலர் வரைவு நேராவண்ணம் அறத்தொடு நிற்பலென்று தலைவிக்குத் தோழி சொல்லியது.

மலைச்செஞ் சாந்தி னார மார்பினன்,
சுனைப்பூங் குவளைச் சுரும்பார் கண்ணியன்,
நடுநாள் வந்து நம்மனைப் பெயரும்;
மடவர லரிவை,நின் மார்பம ரின்றுணை,
மன்ற, மரையா விரிய வேறட்டு
செங்க ணிரும்புலி குழூஉ மதனால்
மறைத்தற் காலையோ அன்றே;
திறப்பல், வாழிவேண் டன்னை,நங் கதவே.

(உரை). மடப்பம்பொருந்திய பெண்ணே,நினது மார்பை விரும்பிய இனிய துணைவனான தலைமகன் மலையினிடத்துச் செஞ்சந்தனப் பூச்சுடன் மாலையையும் அணிந்தவனாய், சுனையிடத்துக் குவளைமலாரற்கட்டிய வண்டுகள் பொருந்திய கண்ணியைச் சூடியவனாய் நள்ளிரவில் நம்மனைப் பக்கத்திலே வந்து·(நின்னைக் கூடப்பெறாது வறிதே) மீள்வான். பெண்மரை கெட்டோட ஆண்மரையைக்கொன்று செவந்த கண்ணையுடைய பெரியபுலி திரியாநிற்கும். அதனால் நிச்சயமாக இது மறைக்குங்காலம் அன்று; நமது கதவை நான் திறந்திடுவேன்; எனக்கு அன்னையன்னாய், நான் சொல்லுமிதனை நீ விரும்பிக்கேள்.

மடவரல் - மடப்பம் ; இளமை. மரையா - பெண்மரை. 'மரை - கானக்குதிரை. ஏறு - மரையின் ஆண். வேண்டு - நீ விரும்பு.

'மறைத்தற் காலையோ அன்று, திறப்பல் கதவு' என்றது நொதுமலர் பலர் மகட்பேசி வரைவொடு வருகின்றார்; இனி உனது தாய் தந்தையர்க்கு உங்கள் களவுக்கூட்டத்தைத் தெரிவித்து அன்னியர் வரைவைத் தடுத்திடாவிடின் தீங்கு பெரிதும் உண்டாம்; ஆதலாற் சுதவைத்திறந்து மறையை வெளியிடுகின்றேன்' என்றாள் என்க.

ஐயூர் முடவனார்] 322 [குறிஞ்சி

சான்றோரை முன்னிட்டுத் தலைமகன் வரைபொருளோடு வந்ததை உணர்ந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

அமர்க்க ணமான் அஞ்செவிக் குழவி
கானவ ரெடுப்ப வெரீஇ, இனந்தீர்ந்து
கான நண்ணிய சிறுகுடிப் பட்டென,
இனைய ரோம்ப மரீஇயவ ணயர்ந்து
[illegible]யுறை வாழ்க்கை வல்லி யாங்கு
மருவின் [illegible]வோ?
செல்வாம், தோழி [illegible].

(உரை) அமர்த்த கண்ணையுடைய காட்டுப்பசுவின் அழகிய காதையுடைய கன்று மறவரிட்டக் கூச்சலைக் கேட்டுப் பயந்து இனத்தினின்று நீங்கிக் காட்டிடத்துள்ள குறவர் குறிச்சியை உற்றுறைந்தாற்போல, தலைமகனிருக்கும் அவ்விடத்தை விரும்பியடைந்து இளையார்போற்ற இல்வாழ்க்கையினமர்ந்து காதலனுடன்கூடி வாழ்தலைக் காட்டிலும் இனியவை வேறெவையேனும் உளவோ? ஆதலால், தோழீ, இபன்றவாறு நடந்து நாம் அவனூருக்குச் செல்வாம், வா.

ஆமான் - ஆமா, காட்டுப்பசு. அஞ்செவி - அழகிய செவ்வி (பருவம்) என்றுமாம். எடுப்ப - ஒலியையெழுப்ப, ஆர்ப்பெடுப்ப. அவண் நயந்து மரீஇ. வல்லியாங்கு - வல்லவாறு. மருவு - மருவுதல். ஒல்வாங்கு - ஒல்லாங்கு, இயன்றவாறு, பொருந்தியவாறு. ஒல்வு - ஒல்லுதல்.

'ஆமான்குழவி...சிறுகுடிப்பட்டென' என்றது அதைப் போலத்தானும் ஊராரெடுத்த அலரை அஞ்சி, தமரினீங்கித் தலைமகனூருக்குச்சென்று, அவன் மனைவியாகி, அவன்மனைக்கண்ணே உறைந்திடுவலென்று தோழிக்குச் சொல்லி அவளை உடன்செல வேண்டியதாம்.

பதடிவைகலார்] 323 [முல்லை

வினைமுற்றி மீளுந்தலைவன் தேர்ப்பாகனுக்குச் சொல்லியது.

எல்லாம் எவனோ? பதடி வைகல்;
பாணர் படுமலை பண்ணிய வெழாஅலின்
வானத் தெடுஞ்சுவர் நல்லிசை வீழப்
பெய்த புலத்துப் பூத்த முல்லைப்
பசுமுகைத் தாது நாறு நறுநுதல்
அரிவை தோளணைத் துஞ்சிக்
கழிந்த நாளிவண் வாழ்ந்த நாளே.

(உரை). மழை பெய்த நிலத்திற் பசியவரும்புகள் பூத்த முல்லைப்பூவின் மகரந்தம் மணங்கமழும் நல்ல நெற்றியையுடைய காதலியின் தோள்களாகிய அமளியிலே, வானுலகத்தவர் வீணையில் வாசித்த நல்லிசையாகிய சுவர் அழிந்து கெடும்படி பாணர்பாடிய 'படுமலை'யென்னுங் குறிஞ்சிப்பண்ணின் திறமாகிய யாழினிசையொடு இனிது துயின்றுகழித்த நாளே நாம் இவ்வுலகத்தில் வாழ்ந்த நாளாம்;அவ்வாறன்றிப் பிறவாறு கழித்த நாட்களெல்லாம் என்ன பயத்தன? பயனற்ற பதராகிய நாட்களேயாம்.

எல்லாம் - பிறநாளெல்லாம். பதடி - பதர்; mere chaff. வைகல் - நாள். படுமலை - குறிஞ்சியாழ்ப் பண்ணின் திறத்தொன்றாகிய 'கௌவாணம்' என்னும் இராகம். இதனைப் பின்வரும் பிங்கலத்தைச் சூத்திரங்களான் அறிக.

நட்ட பாடை அந்தாளி மலகரி
* * * *
குறிஞ்சி கொவாணம் பாடைசூர் துங்கராகம்
* * * *
ஆநந்தை யெனவிவை முப்பத் திரண்டும்
குறிஞ்சி யாழ்த்திற மாகக் கூறுவர்—(6-281)
படுமலை யென்பது பகரிற்.கௌவாணம்—(6-291)

'படுமலை பண்ணிய எழால்' என்பதற்குத் 'துத்தமே குரலாகப் பண்ணிய படுமலைப் பாலையாகிய யாழ்' என்றுமாம். 'துத்தங் குரலாகிற் படுமலைப் பாலை' என்பதும் பிங்கலந்தை (6-303).

எழால் - (1) யாழினிசை; (2) யாழ்.• எடும் - எடுக்கும். எழுப்பும், நல்லிசை என்க. 'சுவர்' - என்பதற்கு சுவர்லோகத்தவராகிய கந்தருவர், கின்னரர் முதலிய யாழிசை வல்லோர், என்று பொருள்கொண்டு, அவருடைய வீணையினிசை தோற்று விழும்படி பாணர் பண்ணிய படுமலைப் பண்ணாகிய யாழிசை என்றுரைப்பாருமுளர். 'தோளிணைத் துஞ்சி' என்பது வேறொரு பாடம்.

தைக்கொண்ட மணற்குவியல்களின் மீதெல்லாம் வலைஞர் கடலிற்கொண்ட பெருமீன்களின் உணங்கலையும், நீரற்ற கழியிற்கொண்ட இருமீனின் உணங்கலையும், வேறு பல மீன்களினுணங்கலையும் புலால்நாற்றமுறத் தாங்கும் கடற் சேர்ப்பனோடுகூடி இன்புற்றுமகிழ்தலாகிய பழிச்செயலை ஒரு காலேனும் நாம் செய்திலமே.

உணங்கல், வாடல் - வெயிலில் உலர்த்திய பொருள். புலவ - (புலால்நாற்றம்) வீச. 'புல்ல' என்பதுமொரு பாடம். பலவுடன் - வேறு உணங்கல் பலவற்றுடன். பரிக்கும் -தாங்கும், சுமக்கும். நக்கது - மகிழ்ந்தது; இங்கு மகிழ்ச்சிக்குக்காரணமான கலவியைச்செய்தது. பழி - களவுப் புணர்ச்சி. புள் - வண்டு. பொங்கர் - மரக்கொம்பு, கிளை. சேரி - பரதவரூர். கொன் - பயனற்ற, வீணான; அஞ்சத்தக்க என்றுமாம். கொடுமையான் - கொடுமையால்.

வெண்மணலெக்கர்தொறும் உணங்கலின் வாடலொடு பலவுடன் புலவப் பரிக்குந் துறை, என்றும்; கொடுமையான் றுறைவனொடு நக்கதோர் பழியுமிலம், என்றுங் கூட்டுக.

321

குறிஞ்சி

தொதுமலர் வரைவு நேராவண்ணம் அறத்தொடு நிற்பலென்று தலைவிக்குத் தோழி சொல்லியது.

மலைச்செஞ் சாந்தி னார மார்பினன்,
சுனைப்பூங் குவளைச் சுரும்பார் கண்ணியன்,
நடுநாள் வந்து நம்மனைப் பெயரும்;
மடவர லரிவை,நின் மார்பம ரின்றுணை,
மன்ற, மரையா விரிய வேறட்டு
செங்க ணிரும்புலி குழுமு மதனால்
மறைத்தற் காலையோ அன்றே;
திறப்பல், வாழிவேண் டன்னை,நங் கதவே.

(உரை). மடப்பம்பொருந்திய பெண்ணே, நினது மார்பை விரும்பிய இனிய துணைவனான தலைமகன் மலையினிடத்துச் செஞ்சந்தனப் பூச்சுடன் மாலையையும் அணிந்தவனாய், சுனையிடத்துக் குவளைமலரற்கட்டிய வண்டுகள் பொருந்திய கண்ணியைச் சூடியவனாய் நள்ளிரவில் நம்மனைப் பக்கத்திலே வந்து (நின்னைக் கூடப்பெறாது வறிதே) மீள்வான். பெண்மரை கெட்டோட ஆண்மரையைக்கொன்று செவந்த கண்ணையுடைய பெரியபுலி திரியாநிற்கும். அதனால் நிச்சயமாக இது மறைக்குங்காலம் அன்று; நமது கதவை நான் திறந்திடுவேன்; எனக்கு அன்னையன்னாய், நான் சொல்லுமிதனை நீ விரும்பிக்கேள்.

மடவரல் - மடப்பம் ; இளமை. மரையா - பெண்மரை. மரை - காணக்குதிரை. ஏறு - மரையின் ஆண். வேண்டு - நீ விரும்பு.

'மறைத்தற் காலையோ அன்று, திறப்பல் கதவு' என்றது தொதுமலர் பலர் மகட்பேசி வரைவொடு வருகின்றார்; இனி உனது தாய் தந்தையர்க்கு உங்கள் களவுக்கூட்டத்தைத் தெரிவித்து அன்னியர் வரைவைத் தடுத்திடாவிடின் தீங்கு பெரிதும் உண்டாம்; ஆதலாற் சுதவைத்திறந்து மறையை வெளியிடுகின்றேன்' என்றாள் என்க.

ஐயூர் முடவனார்] 322 [குறிஞ்சி

சான்றோரை முன்னிட்டுத் தலைமகன் வரைபொருளோடு வந்ததை உணர்ந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

அமர்க்க ணாமான் அஞ்செவிக் குழவி
கானவ ரெடுப்ப வெரீஇ, இனந்தீர்ந்து
கான நண்ணிய சிறுகுடிப் பட்டென,
இளைய ரோம்ப மரீஇயவ ணயந்து
மனையுறை வாழ்க்கை வல்லி யாங்கு
மருவி னினியவும் உளவோ?
செல்வாம், தோழி, ஒல்வாங்கு நடந்தே.

(உரை) அமர்த்த கண்ணையுடைய காட்டுப்பசுவின் அழகிய காதையுடைய கன்று மறவரிட்ட கூச்சலைக் கேட்டுப் பயந்து இனத்தினின்று நீங்கிக் காட்டிடத்துள்ள குறவர் குறிச்சியை உற்றுறைந்தாற்போல, தலைமகனிருக்கும் அவ்விடத்தை விரும்பியடைந்து இளையார்போற்ற இல்வாழ்க்கையினமர்ந்து காதலனுடன்கூடி வாழ்தலைக் காட்டிலும் இனியவை வேறெவையேனும் உளவோ? ஆதலால், தோழீ, இயன்றவாறு நடந்து நாம் அவனூருக்குச் செல்வாம், வா.

ஆமான் - ஆமா, காட்டுப்பசு. அஞ்செவி - அழகிய செவ்வி (பருவம்) என்றுமாம். எடுப்ப - ஒலியையெழுப்ப, ஆர்ப்பெடுப்ப. அவண் நயந்து மரீஇ. வல்லியாங்கு - வல்லவாறு. மருவு - மருவுதல். ஒல்வாங்கு - ஒல்லாங்கு, இயன்றவாறு, பொருந்தியவாறு. ஒல்வு - ஒல்லுதல்.

'ஆமான்குழவி...சிறுகுடிப்பட்டென' என்றது அதைப் போலத்தானும் ஊராரெடுத்த அலரை அஞ்சி, தமரினீங்கித் தலைமகனூருக்குச்சென்று, அவன் மனைவியாகி, அவன்மனைக்கண்ணே உறைந்திடுவலென்று தோழிக்குச் சொல்லி அவளை உடன்செல வேண்டியதாம்.

பதடிவைகலார்] 323 [முல்லை

வினைமுற்றி மீளுந்தலைவன் தேர்ப்பாகனுக்குச் சொல்லியது.

எல்லாம் எவனோ? பதடி வைகல்;
பாணர் படுமலை பண்ணிய வெழாஅலின்
வானத் தெடுஞ்சுவர் நல்லிசை வீழப்
பெய்த புலத்துப் பூத்த முல்லைப்
பசுமுகைத் தாது நாறு நறுநுதல்
அரிவை தோளணைத் துஞ்சிக்
கழிந்த நாளிவண் வாழ்ந்த நாளே.

(உரை). மழை பெய்த நிலத்திற் பசியவரும்புகள் பூத்த முல்லைப்பூவின் மகரந்தம் மணங்கமழும் நல்ல நெற்றியையுடைய காதலியின் தோள்களாகிய அமளியிலே, வானுலகத்தவர் வீணையில் வாசித்த நல்லிசையாகிய சுவர் அழிந்து கெடும்படி பாணர்பாடிய 'படுமலை'யென்னுங் குறிஞ்சிப்பண்ணின் திறமாகிய யாழினிசையொடு இனிது துயின்றுகழித்த நாளே நாம் இவ்வுலகத்தில் வாழ்ந்த நாளாம்; அவ்வாறன்றிப் பிறவாறு கழித்த நாட்களெல்லாம் என்ன பயத்தன? பயனற்ற பதராகிய நாட்களேயாம்.

எல்லாம் - பிறநாளெல்லாம். பதடி - பதர்; mere chaff. வைகல் - நாள். படுமலை - குறிஞ்சியாழ்ப் பண்ணின் திறத்துளொன்றாகிய 'கௌவாணம்' என்னும் இராகம். இதனைப் பின்வரும் பிங்கலத்தைச் சூத்திரங்களான் அறிக.

நட்ட பாடை அந்தாளி மலகரி
* * * *
குறிஞ்சி கொவாணம் பாடைசூர் துங்கராகம்
* * * *
ஆநந்தை யெனவிவை முப்பத் திரண்டும்
குறிஞ்சி யாழ்த்திற மாகக் கூறுவர்—(6-281)
படுமலை யென்பது பகரிற்.கௌவாணம்—(6-291)

'படுமலை பண்ணிப எழால்' என்பதற்குத் 'துத்தமே குரலாகப் பண்ணிய படுமலைப் பாலையாகிய யாழ்' என்றுமாம். 'துத்தங் குரலாகிற் படுமலைப் பாலை' என்பதும் பிங்கலந்தை (6-303).

எழால் - (1) யாழினிசை; (2) யாழ். எடும் - எடுக்கும். எழுப்பும், நல்லிசை என்க. 'சுவர்' - என்பதற்கு சுவர்லோகத்தவராகிய கந்தருவர், கின்னரர் முதலிய யாழிசை வல்லோர், என்று பொருள்கொண்டு, அவருடைய வீணையினிசைதோற்று விழும்படி பாணர் பண்ணிய படுமலைப் பண்ணாகிய யாழிசை என்றுரைப்பாருமுளர். 'தோளிணைத் துஞ்சி' என்பது வேறொரு பாடம்.

அப்பர்

அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்.

14&15 சிற்பமும் உருவசாஸ்திரமும்.

[870-வது பக்கத்தொடர்ச்சி]

பிறர்க்கென்றும் அறியப்படாது, துறந்தார்க்குத் தூயநெறியாய் நின்றவப் பெருமான் திருமுக நோக்கு எவ்வாறிருக்கு மென்பதைத் திருநாவுக்கரசர் போன்ற சிற்பிகளே எடுத்துக்காட்ட வல்லவராவர். அடியவர்களுக்கு ஆரா அமுதாம் உருவம் தட்சணாமூர்த்தியாய்ச் சனகாதியருக்கு மறையின் முடிவு விளக்கிய திருக்கோலத்தை அருள்மயமா யெடுத்துக் காட்டலே கலையின் சிறப்பாகும். மனத்தின் தன்மையை விளக்கா ஓவியம் சிற்பம் முதலியன அக் கலையின் பதரேயன்றோ :

பரமசிவன் திருவுருவத்தில் தோன்றுகின்ற ஒவ்வொரு வஸ்துவும் அரியபொருளொன்றையாகிலும் விளக்கும். பயனின்றி அவர் ஒன்றும் புனையவில்லை.

வெறிவிரவு மலர்க்கொன்றை விளங்கு திங்கள்
வன்னியொடு விரிசடைமேல் மிலைச்சி னான்காண்
பொறிவிரவு கதநாக மக்கி னோடு
பூண்டவன்காண்பொருபுலித்தோலாடையான்காண்
அறிவரிய நுண்பொருள்க ளாயி னான்காண்
ஆயிரம்பே ருடையவன்கா ணந்தண் கானல்
செறிபொழில்சூழ் மணிமாடத் திருப்புத் தூரில்
திருத்தளியன் காணவனென் சிந்தை யானே.

திருப்புத்தூர் - திருத்தாண்டகம் 7.

மறையு மோதுவர் மான்மறிக் கையினர்
கறைகோள் கண்ட முடைய கபாலியார்
துறையும் போகுவர் தூயவெண் ணீற்றினர்
பிறையுஞ் சூடுவர் பேரெயி லாளரே.

திருப்பேரெயில் - திருக்குறுந்தொகை - 1.

"நீறுடைய மார்பிலிம வான்மகளோர் பாகநிலைசெய்து கூறுடைய வேடமொடு கூடியழ காயதொரு கோலம்" எனச் சம்பந்தர் திருவாக்கிலும் காண்க. இத்தகைய கோலத்தை யாவரும் எழுதமுடியாதெனினும், உலகத்து மன்பதை யுய்யும்படி எம்பெருமானது திருவருள் விளங்குமாறு எவ்வாறு காட்டக்கூடுமோ அவையாவும் செய்தல்வேண்டும். சிவபெருமான் திருவுருவத்தின் வண்ண மெவ்வாறெனின்,

புதுவிரி பொன்செ யோலை பொருகா
தொர்காது சுரிசங்க நின்று புரள
விதிவிதி வேதகீத மொருபாடு
மோத மொருபாடு மெல்ல நகுமால்
மதுவிரி கொன்றை துன்று சடைபாக
மாதர் குழல்பாக மாக வருவர்
இதுவிவர் வண்ண வண்ண மிவள் வண்ண
வண்ண மெழில் வண்ணவண்ண மியல்பே.

கணிவளர் வேங்கை யோடு கடிதிங்கள்
கண்ணி கழல்கால் சிலம்ப வழகார்
அணிகிள ரார வெள்ளை தவழ்சுண்ண
வண்ண வியலா லொருவ ரிருவர்
மணிகிளர் மஞ்ஞை யால மழையாடு
சோலை மலையான் மகட்கு மிறைவர்
அணிகிள ரன்ன வண்ண மவள்வண்ண
வண்ண மவர்வண்ண வண்ண மியல்பே.

சிவனெனு மோசை 10 & 6.

இவ்வர்த்தநாரீச்வர வண்ணத்தின் தெளிபொருள் விளங்குமாறு வாகீசர் வேறு இடங்களில் திருப்பாசுரங்கள் பாடியுள்ளார். அவற்றை யாம் விருத்திபுரையாகக் கொள்ளல் நன்று.—

தஞ்ச வண்ணத்தர் சடையினர் தாமுமோர்
வஞ்ச வண்ணத்தர் வண்டார் குழலாளொடும்
துஞ்ச வண்ணத்தர் துஞ்சாத கண்ணார்தொழும்
அஞ்ச வண்ணத்த ரரநெறி யாரே.

திருவாரூர் அரநெறி 5

என்பதைக் காண்க. இவ்வண்ணங்களின் நிறம்—

முடிவண்ணம் வானமின் வண்ணம், தம்மார்பின்
பொடிவண்ணம் தம்புக ழூர்தியின் வண்ணம்
படிவண்ணம் பாற்கடல் வண்ணம்; செஞ்ஞாயி
றடிவண்ணம், ஆரூ ரரநெறி யார்க்கே.

ஷை 9

அடியார்களுக்கு முதலில்காணப்படும் கடவுளின் திருவுருவ பாகமானது அவர் திருவடிகளே யாகும். ஞானச்சுடர்விடும் இத்திருவடிகளுக்கு, இயற்கைச் சுடர்களிற் சிறந்ததான ஞாயிறை ஒப்பிடக்கூடுமன்றி, வேறு எப்பொருளின் சுடரும் ஒவ்வாது. திருமுடி "மின்" என்றார்; அது தரிசனம் தந்தாலும் நெடுநேரம் காணக்கூடியதன்று. திருவடி அவ்வாறன்று. அதைப் பற்றுகப் பற்றியவருக்கு அச்சுடர் சூரியவொளிபோல் நிலையாயும் வேண்டளவும் அநுபவிக்கக் கூடியதாம்.

அரும்பித்த செஞ்ஞாயி றேய்க்கும்மடி
யழகெழுத லாகா வருட்சேவடி
சுரும்பித்த வண்டினங்கள் சூழ்ந்தவடி
சோமனையுங் காலனையுங் காய்ந்தவடி
பெரும்பித்தர் கூடிப் பிதற்றுமடி
பிழைத்தார் பிழைப்பரிய வல்லவடி
திருந்துநீர்த் தென்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. 4
* * * *
திருமகட்குச் செந்தா மரையாமடி
சிறந்தவர்க்குத் தேறாப் விளக்குமடி
பொருளவர்க்குப் பொன்னுரையாய் நின்றவடி
புகழ்வார் புகழ்தகைய வல்லவடி
உருவிரண்டு மொன்றோன்றோ டொவ்வாவடி
யுருவென் றுணரப் படாதவடி
திருவதிகைத் தென்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. 6
* * * *
உரைமாலை யெல்லா முடையவடி
யுரையா லுணரப் படாதவடி
வரைமாதை வாடாமை வைக்குமடி
வானவர்க டாம்வணங்கி வாழ்த்துமடி

அரைமாத் திரையி லடங்கும்மடி
யகல மளக்கிற்பா ரில்லாவடி
கரைமாங் கலிக்கெடில நாடன்னடி
கமழ்வீரட் டானக் காபாலியடி. 7

* * * *

அணியனவுஞ் சேயனவு மல்லாவடி
யடியார்கட் காரமுத மாயவடி
பணிபவர்க்குப் பாங்காக வல்லவடி
பற்றற்றார் பற்றும் பவளவடி
மணியடி பொன்னடி மாண்பாமடி
மருந்தாய்ப் பிணிதீர்க்க வல்லவடி
தணிபாடு தண்கெடில நாடன்னடி
தகைசார் வீரட்டத் தலைவன்னடி. 9
திருவடித் திருத்தாண்டகம்.

இவ்வாறு பிரகாசிக்கும் இறைவனடியைச் சிற்பத்தில் விளக்க நவரத்தினங்களா லதனை அமைத்தல் வேண்டும்.

முத்தினை மணிதன்னை மாணிக் கத்தை
மூவாத கற்பகத்தின் கொழுந்து தன்னைக்
கொத்தினை வயிரத்தைக் கொல்லே றூர்ந்து
கோளரவொன் றாட்டுங் குழகன் றன்னைப்
பத்தனைப் பத்தர் மனத்து ளானைப்
பரிதிபோல் திருமேனி யுடையான் றன்னை
அத்தனை யாரூரி லம்மான் றன்னை
யறியா தடிநாயே னயர்த்த வாறே.
திருவாரூர் திருத்தாண்டகம் 8.

பாதத்தான் முயலகனைப் பாது காத்துப்
பாரகத்தே பரஞ்சுடராய் நின்ற நாளோ
கீதத்தை மிகப்பாடு மடியார்க் கென்றுங்
கேடிலா வானுலகங் கொடுத்த நாளோ
பூதத்தான் பொருநீலி புனிதன் மேவிப்
பொய்யுரையா மறைநால்வர் விண்ணோர்க்கென்
வேதத்தை விரிப்பதற்கு முன்னோ பின்னோ [றும்
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளோ.
திருவாரூர் - திருத்தாண்டகம் 8.

இவ்வாறு ஒளிவிடுகின்ற திருப்பாதங்களில் கிண்கிணென்ன * ஓங்காரப்பிரணவ மொலிக்கும் அறைகழலும் அதன் சிலம்பும் அமைப்பதும் சிற்பியின் பெருமையே. அதை அப்பர்,

ஒருகாலத் தொன்றாகி நின்றவடி
யூழிதோ றூழி யுயர்ந்தவடி
பொருகழலும் பல்சிலம்பும் மார்க்கும்மடி
புகழ்வார் புகழ்தகைய வல்லவடி
இருநிலத்தா ரின்புற்றங் கேத்தும்மடி
யின்புற்றா ரிட்டபூ வேறும்மடி
திருவதிகைத் தென்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி.
திருவடித் திருத்தாண்டகம் 5.

இக் கழற் சேவடியைச் சம்பந்தரும்,

அறையார்கழ லந்தன்றனை யயின்மூவிலை யழகார்
மறையார்கெடு வேலின்மிசை யேற்றானிடங் கருதில்
மறையாயின பலசொல்லியொண் மலர்சாந்தவை [கொண்டு
முறையான்மிகு முனிவர்தொழு முதுகுன்றடை [வோமே.
திருமுதுகுன்றம் - பண் - நட்டபாடை 5.

நிழறிகழ் மழுவினை யானையின்றோல்
அழறிகழ் மேனியி லணிந்தவனே
கழறிகழ் சிலம்பொலி யலம்பநல்ல
முழவொடு மருநட முயற்றினனே
முடிமேல் மதிசூடினை முருகமர் பொழிற்புகலி
அடியா ரவரேத்துற வழகொடு மிருந்தவனே.
திருப்பிரம்பு - நாலடி மேல்வைப்பு 4.

எனப் பாடுவார். சிவபெருமான் பாதங்களில் கழலாடுவது வீரர்கள் வெற்றியைக் காட்டும் வீரகெண்டாமணி யென்பது அவ்வளவு சிறப்பன்று. என்றும் அவர் ஓயாது செய்யும் திருநடனத்தின் கருவியென்பதே பொருந்தும்.

கிண்டும் கிளர்ந்தும் பொற்கேழன் முன்றேடின கேடு
ஆண்டும் பலபல வூழியு மாயின வாரணத்தின் [படா
வேண்டும் பொருள்கள் விளங்கநின்றாடின மேவுசிலம்
பீண்டுங் கழலின வின்னம்ப ரான்ற னிணையடியே.
திருவின்னம்பர் - திருவிருத்தம் 6.

சிவபெருமான் திருவுருவத்துள் அவர் நடனமாடும் காலில் * கழலின்மேல் காணப்படுவன யாவை? நீலமணி மிடறுமுதல் திருப்பாதங்களி லுள்ள கழல்கள் வரையில் கரியின்தோல் மூடப்பட்டிருக்குமென்பது அப்பர் கூற்றும்:—

கான்மறையும் போதகத்தி னுரிவை கண்டேன்
காலிற் கழல்கண்டேன் கரியின் றோல்கொண்
டேன்மறையப் போர்த்த வடிவுங் கண்டே
னுள்க மனம்வைத்த வுணர்வுங் கண்டேன்
நான்மறையா னொடு நெடியமாலும்
நண்ணிவரக் கண்டேன் திண்ண மாக
மான்மறிதங் கையின் மருவக் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. 5

விளைத்த பெரும்பத்தி கூர நின்று
மெய்யடியார் தம்மை விரும்பக் கண்டேன்
இளைக்குங் கதநாக மேனி கண்டேன்
என்பின்கலந் திகழ்ந்து தோன்றக் கண்டேன்
திளைக்குந் திருமார்பி னீறு கண்டேன்
சேணார் மதின்மூன்றும் பொன்ற வன்று
வளைத்த வரிசிலையுங் கையிற் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. 4

பாட வடியார் பரவக் கண்டேன்
பத்தர்கணங் கண்டேன் மொய்த்த பூதம்
ஆடன் முழவ மதிரக் கண்டே
னங்கையனல் கண்டேன் கங்கையாளைக்

---

* தாடவு டுக்கையன் றாமரைப்பூஞ் சேவடியன்
கோடலா வேடத்தன் கொண்டதோர் வீணையினான்
ஆடரவக் கிண்கிணிக்கா லன்னானோர் சேடனை
யாடுந் திருக்கூத்தைக் கண்டதா ரூரே.
திருவாரூர் - பண் - சீகாமரம் 10.

* சலசல சந்தகி லோடு முந்திச்
சந்தன மேகரை சார்த்தி யெங்கும்
பலபல வாய்த்தலை யார்த்து மண்டிப்
பாய்ந்திழி காவிரிப் பாங்கரின்வாய்க்
கலகல நின்றதி நுங்கழலான்
காதலிக் கப்படுங் காட்டுப் பள்ளிச்
சொலவல தொண்டர்க ளேத்தநின்ற
சூலம்வல் லான்கழல் சொல்லுவோமே.
சம்பந்தர்.

கோட லராவார் சடையிற் கண்டேன்
கொக்கினிதழ் கண்டேன் கொன்றை கண்டேன்
வட்டற் றலையொன்று கையிற் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. 1

குழையார் திருத்தோடு காதிற் கண்டேன்
கொக்கரையுஞ் சச்சரியுங் கொள்கை கண்டேன்
இழையார் புரிநூல் வலத்தே கண்டேன்
ஏழிசை யாழ்வீணை முரலக் கண்டேன்
தழையார் சடைகண்டேன் றன்மை கண்டேன்
றக்கையொடு தாளங் கறங்கக் கண்டேன்
மழையார் திருமிடறு மற்றுங் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. 7

பாலின் மொழியாளோர் பாகங் கண்டேன்
பதினெண் கணமும் பயிலக் கண்டேன்
நீல நிறமுண்ட கண்டங் கண்டேன்
நெற்றிக்கண் கண்டேன் பெற்றங் கண்டேன்
காலைக் கதிர்செய் மதியங் கண்டேன்
கரந்தை திருமுடிமேற் றோன்றக் கண்டேன்
மாலைச் சடையு முடியுங் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. 2
திருவாய்மூர்-திருத்தாண்டகம்.

மேற்கண்ட பாசுரங்களில் விளக்கிய பிஞ்ஞகன்றன் பாதாதிகேச வர்ணனையைத் துணையாய்க் கொண்டு சிலைகளிற் சிற்பிக்கவும் ஓவியம் எழுதவும் கூடும். ஒவ்வொரு அங்க அமைப்பும் உள்ளன்பும் கருணையும் காட்டல் வேண்டும். திருவதிகை வீரட்டானம் அடையாளத் திருத்தாண்டகத்தில் சிற்பநுட்பங்களை ஒட்டி இக் கலையைப் பயன்படுத்தப் பல விதிகளையும் அப்பர் ஒருவாறு குறிப்பிட்டுள்ளார். சற்று நிதானமாய் அப் பதிகத்தைக் கண்ணுற்றால் இக்கலையின் மாட்சிமை விளங்கும்.

நம்மாழ்வார் வைபவம்.

திருவாய்மொழி.

[874-வது பக்கத் தொடர்ச்சி]

இரண்டாம் பத்து—3-ம் தசகம்.

6-ம் பாசுரம்.

சேர்ந்தார் தீவினைகட் கருநஞ்சைத் திண்மதியைத்
தீர்ந்தார் தம்மனத்துப் பிரியாத வருயிரைச்
சோர்ந்தே பொகல்கொடாச் சுடரை யரக்கியைமூக்
கீர்ந்தாயை யடியே னடைந்தேன் முதன்முன்னமே.

பதவுரை :—சேர்ந்தார் - அடைந்தவர்களுடைய, தீவினைகட்கு - கொடிய கர்மங்களுக்கு, அருநஞ்சை - அக்கருமங்களை அழித்துத்தீர்க்கும் விஷம்போன்றவனையும்; திண்மதியை - திடமான புத்தி போன்றவனையும்; தீர்ந்தார் தம் மனத்து - இவ்வுலக வாஞ்சையை விட்டவர்களுடைய மனத்தினின்று, பிரியாது - நீங்காது, அவர் உயிரை - அவர்களுயிரை, சோர்ந்தே - அயர்ந்தும், பொகல் கொடா - இருட்டாக்காத, சுடரை - ஜோதியாயும்; அரக்கியை - சூர்ப்பணகையை, மூக்கு ஈர்ந்தாயை - மூக்கு அரிந்தவனையும் இருக்கின்ற உன்னை, அடியேன் - அடியேனாகிய நான், முதன் முன்னமே -முதலிலேயே, அடைந்தேன் - தஞ்சமாக அடைந்துவிட்டேன்.

7-ம் பாசுரம்.

முன்னர் யாழ்பயி னூனரம்பின் முதிர்சுவையே
பன்னவர் பயிலும் பரனே பவித்திரனே
கன்னலே யமுதே கார்முகிலே யென்கண்ணா
நின்னலா லிலேன்கா ணென்னைக் குறிக்கொள்ளே.

அவதாரிகை:—மேல் இரண்டுபாசுரங்களில் எம்பெருமானை அடைந்து போந்தவர் அவ்வண்ணம் அடைவதற்குமுன் 'நீ ரக்ஷித்தருளவேண்டு' மென்று பிரார்த்தித்திருக்கவேண்டியதாயிருக்க அடைந்தபின் ரக்ஷிக்கவேண்டுமென்று அபேக்ஷிப்பது எங்ஙனம் ஒவ்வும் என்ன ஐயமுண்டாயின்—இப்பொழுது நடக்கும் கலவிக்குக் கேடு ஏதாவது வந்துவிடுமோ என்று பயப்பட்டு ஆழ்வார் ரக்ஷிக்கப் பிரார்த்திக்கிறாரென்று கொள்ளவேண்டும்.

உரை:—முன்நல் யாழ் பயில் நூல் நரம்பின்முதிர் சுவையே - பழைய காலம்முதல் வீணை பயிலுகிற சாஸ்திரத்தில் சொல்லியபடி வீணை வாசிப்பதால் உண்டாகும் தந்தியின் இனிய ஓசைச்சுவையே; கன்னலே - கற்கண்டுக் கட்டியே, அதாவது வாய்க்குத் தித்திப்பாயுள்ள ருசியே; அமுதே-மெய் தீண்டினால் குளிர்ச்சிரஸமும், மனதால் உணர்ந்தால் பேரின்பமும் அளிக்கின்ற பொருளே; என் கண்ணா - கண்கொண்டு காண இனிமையானவனே; கார்முகிலே - உலகுக்கு உபகாரமாகையால் உகப்பும் ஆனவனே. (ஸர்வ இந்திரியங்களுக்கும் மனதிற்கும் நிரவதிக இன்பம் பயக்கின்றாய்) பன்னவர் பயிலும் பரனே - பரம பாகவதர்களால் சிந்திக்கப்படுகிற பிரபுவே; பவித்திரனே - பக்தர்கள் பாபங்களை எல்லாம் போக்கி அவர்களைத் தன்னை யடையும்படி செய்கிறவனே; நின் அல்லால் இலேன் - உன் கிருபை யில்லாமற்போனால் நான் உய்யமாட்டேன். அதாவது, இன்பமொன்று மில்லாமல் ஸர்வ சூன்னியனாய்விடுவேன்; ஆதலால், குறிக்கொள் - என்னை விடாது கைப்பற்றி யருளவேண்டும்.

8-ம் பாசுரம்.

குறிக்கொள் ஞானங்களா லெனையூழி
செய்தவமுங்
கிறிக்கொண்டிப் பிறப்பே சிலநாளி
லெய்தனன் யான்
உறிக்கொண்டவெண்ணெய்பாலொளித்துண்ணு
மம்மான்பின்
நெறிக்கொண்ட நெஞ்சனாய்ப் பிறவித்துயர்
கடிந்தே.

பொழிப்புரை:—ஊழிஊழியாகக் கர்மயோகமும் ஞானயோகமும் அநுஷ்டித்து அவை ஒன்றின் வழியாகப் பக்தியோகத்தை முடித்து அதின் பலமாண பகவானை யடைவதான மோக்ஷத்தை அடைந்தேன் - இதற்கு உபாயம் (கிறி) என்னென்னில், வெண்ணெயும்

பாலும் திருடி அமுதுசெய்யும் ஸ்ரீ கிருஷ்ணபகவானிடத்தில் ஸ்திரமாய் மனதை நான் செலுத்தினதேயாகும். அதனால் பல பிறப்பு இறப்புக்களாகத் தொடர்ந்துவரும் ஜன்மத்தைக் கொஞ்சகாலத்துக்குள்ளே ஒழித்துக்கொண்டு அவனிடத்திலுள்ள ஈடுபாட்டாலே அவனை அடைந்தேன்.

விசேஷக் குறிப்புக்கள்:—முன்பாசுரத்தில் தன்னைக் கடைப்பிடித்து ரக்ஷிக்க வேண்டுமென்று பகவானை வேண்டிக்கொண்டவர் இப்பாசுரத்தில் பகவானை அடைந்தேனென்று சந்தோஷிக்கக் கூடுமோவென்ன—பகவானைப் பிரிவோமோ என்ற சங்கை இவர் மனதிலிருந்து நீங்கியிருந்தால் இவர் ஸந்தோஷிக்கலாம். மஹாநுபாவனை ஆழ்வார் திருவுள்ளத்தில் "என்னை விடாதே கண்டா" யென்ற விண்ணப்பத்துக்கு "நாம் விட யாதொரு காரணமுமில்லையே" எனப் பகவான் பதில் அளிக்க ஆழ்வார் திருவுள்ளம் தீர்ந்து தெளிந்து ஸந்தோஷிக்கிறாரென்று கொள்ள வேண்டும்.

"அடைந்தேன்"—இறந்தகாலத்தில் மோக்ஷமாகிய பகவானை "அடைந்தேன்" என்று சொல்லக் கூடுமோ?—இவ்வுலகில் பாசுரங்கள் பாடிக்கொண்டிருக்கிறவர் எங்ஙனே சொல்லலாம்? என்ன—மோக்ஷம் கைக்கு வந்துவிட்டதாகவே நினைத்துக் கூறியபடி.

மோக்ஷத்திலும் பகவானிடத்தில் இடைவிடாத ஈடுபாடும் பக்தியும் வேண்டுமென்று இப்பாசுரத்தால் கற்பிக்கிறார்.

9-ம் பாசுரம்

கடிவார் தண்ணந்துழாய்க் கண்ணன் விண்ணவர் பெரு
படிவான மிறந்த பரமன் பவித்திரன்சீர்ச் [மான்
செடியார் நோய்கள் கெடப்படிந்து குடைந்தாடி
அடியேன் வாய்மடுத்துப் பருகிக் களித்தேனே.

பதக்குறிப்புக்கள்:—படிவானமிறந்தபரமன்-வானம்-வானத்தில், படி - ஒப்பு - நிகர், இறந்த - கடந்த - அதாவது இல்லாதவன்—வைகுண்டத்தில் பகவானை ஒப்பார் இல்லாத பரமன் - உத்கிருஷ்டன்.

செடியார் நோய்கள் கெட—செடி-குற்றம்நிறைந்த, நோய்கள் - மனவருத்தங்கள், கெட - நசிக்கும்படி, சீர்குடைந்து - ஆடி—சீர் - கல்யாண குணங்களில், குடைந்து இறங்கி, ஆடி - முழுகி - அனுபவித்து, வாய்மடுத்து - வாயைவைத்து உருசிபார்த்து.

பொழிப்புரை:—நிரவதிக ஆநந்தத்தை அளிப்பவனாய்த் தேவர்களுக்கு அதிபதியாய்த் திருநாட்டிலும் தனக்கொப்பாரும் மிக்காரு மில்லாதவனாய் ஆச்ரிதர் தன்னோடு கலக்கும்படி அவர்கள் பாபங்களையும் போக்கும் ஸ்வபாவனாயிருந்த எம்பெருமானுடைய கல்யாண குணங்களாகிற அமிர்தவெள்ளத்திலே என்னுடைய விடாயெல்லாந்தீரும்படி போய்ப் புக்குப் படிந்து குடைந்தாடி வாய்மடுத்துப் பருகிக் களித்தேன் என்கிறார்.

10-ம் பாசுரம்.

களிப்பும் கவர்வுமற்றுப் பிறப்புப்பிணி மூப்பிறப்பற்று
ஒளிக்கொண்ட சோதியுமா யுடன்கூடுவ தென்று [கொலோ
துளிக்கின்ற வானிந் நிலம் சுடராழி சங்கேந்தி
அளிக்கின்ற மாயபிரா னடியார்கள் குழாங்களையே.

பதவுரை:—களிப்பும் - ஐம்புலன்களால் அறியப்படும் விஷயசுகத்தையும், கவர்வும் - அவ்விஷயங்கள் கிட்டாதபோது உண்டாகும் ஆசையும், அற்று - பற்றறுத்து, பிறப்பு-ஜன்மம், பிணி - வியாதி, மூப்பு - வயதினாலுண்டாகும் க்ஷீணம், இறப்பு - மரணம், அற்று - மேல் கண்ட நாலுவகைத் துன்பங்களால் பீடிக்கப்படாமல், ஒளி கொண்ட ஜோதியுமாய் - சத்துவ ரஜஸ் தமஸ் என்ற முக்குணங்களி லகப்படாதே சுத்த ஸத்துவ அப்பிராகிருத தேஜோமயமான (வைகுண்டத்தில்) வடிவெடுத்து (கூடுவது என்கிற வினைமுற்றைத் தழுவுகிறது) துளிக்கொள் - மழைபோல் துளித் துளியாய் வர்ஷிக்கிற, வான் - வானத்தையும் - இந்நிலம் - இந்தப் பூமியையும், சுடராழி சங்கேந்தி - சுடர் பொருந்திய சக்கராயுதத்தையும் சங்கையும் ஏந்திக் கொண்டு, அளிக்கின்ற - ரக்ஷித்துவருகிற, மாயபிரான் - ஆச்சரியமான சக்தியுள்ள உபகாரகனுடைய, அடியார் குழாங்களை - நித்தியமாய்ப் பணிவிடை செய்யும் தாஸர்களான வைகுண்டவாஸிகளாம் நித்திய ஸூரிகளுடனே, உடன் கூடுவது - சேர்ந்து தாஸிய ரஸத்தை அநுபவிப்பது, என்று கொல் - எப்போதோ!

குறிப்புக்கள்:—முன்பாசுரத்தில் கல்யாணகுணங்களைத் தாம் அநுபவித்ததாகச் செப்பிய ஆழ்வார் இப்பாசுரத்தில் எப்போது வைகுண்டம் ஏறி அடியார்களுடன் கூடுவது என உரைக்கின்ற இது—நித்திய ஸூரிகளுடன் கலந்து பகவத் குணங்களை அநுபவிக்க வேண்டுமென்றும், தாம் தமதுசரீரத்தைவிட்டுத் தர்ம பூத ஞானத்தால் மோக்ஷதெசையில் ஸுகமடையவேணும் என்றும் ஆசையால் கூறுகிறாரென்று கொள்ளவேண்டும். ஆகவே மோக்ஷ ச்வரூபத்தில் திரிகுணமான சரீரம் நசிக்கிறதென்றும், ஒளி கொண்ட ஜோதியால் (அதாவது பிருகிருதி கலப்பில்லாத சுத்த ஸத்துவம் என்கிற ஒரு ஒண்பொருளால்) சகல ஞானமும் முக்திதெசையில் கிடைக்கிறதென்றும் கற்பிக்கிறார். எட்டாம் பாசுரத்தில்இந்த மோக்ஷதெசையில் இடைவிடாமல் பகவத்பக்தி தொடர்ந்து கொண்டே கிடக்குமென்று கற்பித்தார். இதனால் மோக்ஷ ச்வரூபத்தை இங்கு ஆழ்வார் விசதமாய்க் கற்பித்திருக்கிறாரென்பது அறியத்தக்கது.

11-ம் பாசுரம்.

குழாங்கொள் பேரரக்கன் குலம்வீய முனிந்தவனைக்
குழாங்கொள் தென்குருகூர்ச் சடகோபன் றெரிந் [துரைத்த
குழாங்கொள் ளாயிரத்து ளிவைபத்து முடன்பாடிக்
குழாங்களா யடியீருடன் கூடிநின் றாடுமினே.

குறிப்புக்கள்:— குழாங்கொள் — முதல்வரியில் புத்திர மித்திராதி ராக்ஷஸர்கள் சூழ்ந்த; இரண்டாம் வரியில் - வைஷ்ணவர்கள் கூட்டங்கள் சேர்ந்த; 3-ம் வரியில் 10, 100, 1000 என்று சேர்த்துக் கொடுக்கப்பட்ட ஆயிரம் பாட்டுக்களுக்குள்ளே.

குழாங்களாய் அடியார் எல்லாரும் ஒன்று சேர்ந்து உடன்கூடி - ஏக கண்டராய் ஸ்வரத்தோடே கூடி, உடன்பாடி-எல்லாருடைய மனங்களும் வாய்ப்பாட்டோடு ஒன்றுபட்டு, ஆடுமினே - அநுபவியுங்கோள்.

பொழிப்புரை:—"புத்திரர் மித்திரர்களுடன் ராவணன் மடியும்படி கண் சிவந்தவனை யுள்ளபடி கண்டு சொன்ன இத்திருவாய்மொழியைப் பகவானிடத்தில் ஒரே மனதாய்ப் பக்தியுட னிருப்பவர்களெல்லாரும் கூடி அநுபவியுங்கோள்"—ஆறுயிரப்படி.

189129

தமிழ்ப் பாடம் 146.

இலக்கணம்

[872-வது பக்கத் தொடர்ச்சி]

நிலைமொழி யிறுதியில் ணகரமெய்யும், வருமொழி முதலில் வல்லினமெய்களில் ககர சகர பகர மெய்களும் நிற்பதற்குரிய விதிகளைக் கண்டோம்.

இனி, நிலைமொழி யிறுதியில் ணகர மெய்யும் வருமொழி முதலில் தகரமெய்யும் நின்றக்கால் என்னும் என்பதைக் காணல்வேண்டும்:—

III (b) நிலைமொழி யிறுதியில் ணகரமெய்+வருமொழிமுதலில் தகரமெய்.

(1) வருமொழிமுதலில் ககர சகர பகரங்கள் வர, நிலைமொழி யீற்று ணகரமெய் எவ்வெவ்விடங்களில் டகரமெய்யாகத்திரியுமோ, அவ்விடங்களில் நிலைமொழி யீற்று ணகரமெய் வருமொழி முதலில் தகரமெய் வந்தாலும் டகரமெய்யாகத் திரியும். ஆனால், இந்த ணகர ஈறு டகரமெய்யாகத் திரிவதுமாத்திரமல்லாமல், வருமொழிமுதலில் நின்ற தகரமெய்யும் (ககர சகர பகரங்களைப் போலல்லாமல்) டகரமெய்யாய்த் திரியும்.

i மண்+சுவர்=மட்சுவர்
மண்+தரை=மட்+தரை=மட்டரை.

மூன்றாம்வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகையில், வருமொழிமுதலில் சகரம்வர நிலைமொழியீற்று ணகரமெய் டகரமெய்யாகத்திரிந்தது. ஆனால், தகரம் வர, அத்தகரமெய்யும் டகரமெய்யாய்த் திரியலாயிற்று.

ii கண்+கடை=கட்கடை } ஆறாம் வேற்று
கண்+துளை=கட்டுளை. } மைத் தொகை.

(2) நிலைமொழி யீற்று ணகரமெய், வருமொழி முதலில் ககர சகர பகரங்கள் நிற்க, எவ்வெவ்விடங்களில் டகரமாகத்திரியாமல் இயல்பாயிருக்குமோ, அவ்விடங்களில் தகரம் நின்றாலும் இயல்பாயிருக்கும். ஆனால் வருமொழி முதலில் நின்ற அந்தத் தகரம் மாத்திரம் டகரமாகத் திரியும்.

ஆண்+குணம்=ஆண் குணம் }
ஆண்+தகை=ஆண்டகை }
எண்+கரம்=எண் கரம் }
எண்+தோள்=எண்டோள் }
விண்+சுடர்=விண்சுடர் }
விண்+திங்கள்=விண்டிங்கள் }
கண்+கொட்டியது=கண் கொட்டியது }
கண்+துடித்தது=கண்டுடித்தது }
உண்+சோறு=உண்சோறு
உண்+தயிர்=உண்டயிர்.

குறிப்பு:— பண்புத்தொகையில், வருமொழி முதலில் ககர சகர பகரங்கள் வர நிலைமொழியீற்று ணகரமெய் டகரமெய்யாய்த் திரியும் என முன் கூறினோம். பண்புத்தொகையிலும் இருபெயரொட்டுப் பண்புத்தொகைகளுக்கே இவ்விதி பொருந்தும் எனக் கொள்க. வெண்மை திண்மை நுண்மை தண்மை என்பனபோன்ற பண்புப்பெயர்கள் வெண் திண் நுண் தண் எனநிற்குமாயின் வருமொழிமுதலில் ககர சகர பகரங்கள்வர, அந்த ணகரமெய் டகரமெய்யாய்த் திரியாது.

வெண்+சாம்பல்=வெண் சாம்பல்
திண்+புயம்=திண்புயம்
நுண்+கலை=நுண்கலை
தண்+பூ=தண்பூ.

ஆதலால், இவ்வகை ஈறு கெட்டு நிற்கின்ற பண்புப் பெயர்களுக்குப்பின் வருமொழிமுதலில் தகரம் வருமாயின், அத் தகரம்மாத்திரம் டகரமாகத் திரியும்; இந்த ணகரமெய் டகரமெய்யாய்த்திரியாது:— [கள்.
வெண்மை+திங்கள்=வெண்+திங்கள்=வெண்டிங்
திண்மை+தோள்=திண்+தோள்=திண்டோள்.
நுண்+தோல்=நுண்டோல்
தண்+தாமரை=தண்டாமரை.

எனினும், மண்+தலம், என்பது (மண்ணாகிய தலம் என விரியும்) இருபெயரொட்டுப் பண்புத் தொகையாயிருந்தாலும் (கண்+புலன் = கட்புலன் எனப் புணர்ந்ததுபோல்) மட்டலம் எனப் புணராமல் மண்டலம் என்றே புணரலாகின்றது. விண்+தலம்= விண்டலம் என்று வருவதால் இதனையும் மண்டலம் என வழங்குகின்றனர் போலும். அல்லது தலம் என்பது வடமொழியாயிருப்பதும் இதற்குக் காரணமாகலாம்.

குறிப்பு:—ஊண் தூண் பூண் எனத் தனிநெடிலையடுத்துவரும் ணகரமெய்யீற்றுச் சொற்களுக்கு இங்குரைத்த விதிகள் பொருந்துமோ வென்பது சந்தேகமாயிருக்கின்றது. தூண் தலை, என்பது ஆறாம் வேற்றுமைத் தொகையாயினும் தூட்டலை எனப் புணருமென்று கொள்வதற்கில்லையென நினைக்கின்றோம்.

னகரமெய்

I நிலைமொழி யிறுதியில் னகரமெய்+வருமொழி முதலில் இடையினமெய்.

(a) நிலைமொழியிறுதியில் னகரமெய்யும் வருமொழி முதலில் யகரமும் வரின்—யாதும் விகாரமின்றிப் புணரினும் புணரலாம், அல்லது ஒரு இகரம் தோன்றினுந் தோன்றலாம். இது எல்லாத்தொடர்களுக்கும் ஒக்கும்:—

பொன்+யானை=பொன் யானை—பொன்னியானை.
சொன்னேன்+யான்=சொன்னேன் யான்—
சொன்னேனியான்

(b) நிலைமொழியிறுதியில் னகரமெய்யும் வருமொழி முதலில் வகர மெய்யும் வருமாயின், எல்லாத் தொடர்களிலும் யாதும் விகாரமின்றி இயல்பாய்ப் புணரும்:—

பொன்+விலங்கு=பொன்விலங்கு
தேன்+வாங்கினன்=தேன் வாங்கினன்
கான்+வழி=கான் வழி
வீட்டின்+வாயில்=வீட்டின் வாயில்
காண்பான்+வந்தேன்=காண்பான் வந்தேன்.

II நிலைமொழியிறுதியில் னகரமெய்+வருமொழி முதலில் மெல்லின மெய்:

(a) நிலைமொழியிறுதியில் னகரமெய்யும், வருமொழிமுதலில் ஞகரம் அல்லது மகர மெய்யும் நிற்கு

மானால் எல்லாத்தொடர்களிலும் இயல்பாய்ப் புணரும்.

பொன் + ஞாயிறு = பொன்ஞாயிறு
மகன் + மகிழ்ந்தான் = மகன் மகிழ்ந்தான்
வரின் + மகிழ்வேன் = வரின் மகிழ்வேன்

(b) நிலைமொழியிறுதியில் னகரமெய்யும் வருமொழி முதலில் நகர மெய்யும் நிற்றல்.

(1) நிலைமொழி னகர மெய்யை ஈற்றிலுடைய இரண்டெழுத்துச் சொல்லாயிருந்து, அவ்விரண்டு எழுத்துக்களிலும் முதலெழுத்துக் குறிலாகவும் இருக்குமானால், வருமொழி முதலில் நகரம் வர— நிலைமொழி யீற்று னகரமெய் அப்படியேயிருந்து, வருமொழிமுதல் நகரம் மாத்திரம் எல்லாத்தொடர்களிலும் னகரமாகத் திரியும்.

நின் + நலம் = நின்னலம்.
பொன் + நாடு = பொன்னாடு.
என் + நினைத்தாய் = என்னினைத்தாய்.
மின் + நிறம் = மின்னிறம்

(2) நிலைமொழி இரண்டெழுத்துக்களுக்கு மேற்பட்டதாகவேனும், அல்லது இரண்டெழுத்துக்களால் அமைந்ததாயின் முதலெழுத்து நெடிலாகவேனும் இருந்து னகரமெய்யை யீற்றில் உடையதாக, வருமொழி முதலில் நகரமெய் நிற்குமானால், எல்லாத்தொடர்களிலும் முன் காட்டியபடி வருமொழி முதலில் உள்ள நகரம், னகரமாய்த் திரிவதுமாத்திரமன்றி நிலைமொழி யீற்றிலிருக்கும் னகரமெய் கெட்டும் விடும்:—

ஊன் + நீங்கியது = ஊனீங்கியது
மகன் + நலம் = மகனலம்.
வந்தான் + நம்பி = வந்தானம்பி
ஏன் + நல்கினாய் = ஏனல்கினாய்.
மான் + நோக்கம் = மானோக்கம்.

மனித சுகமும் தத்துவ ஞானமும்

ஸ்ரீமான் இராதா கிருஷ்ணன்

மைசூர் மஹாராஜாவின் சில்வர் ஜுபிளி (Silver jubilee) விழாப்பிரசங்கத்தை யொட்டி இவ்வருடம் மைசூர்ச் சர்வகலாசாலையில்,ஸ்ரீமான் ராதாகிருஷ்ணன் அவர்கள் நிகழ்த்திய உரைச்சுருக்கம் வருமாறு:—

"மைசூர் மன்னரின் ஜுபிளியை ஒட்டிப் பிரசங்கமொன்று செய்யவேண்டுமென்று, இச்சர்வகலாசாலையார் என்னைக் கேட்க, நான் நன்றென்று, மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டேன். மைசூர் சர்வகலாசாலையைநிறுவி அன்னதன் சான்ஸலராய் இருந்து வளர்த்தும் வருகின்ற மன்னர்பிரான் ஜுபிளிவிழாவையொட்டி ஏற்பாடான வருஷக்கூட்டத்தில் யார்தான் பிரசங்கம் செய்ய ஏற்றுக்கொள்ளார். மன்னவரின்செங்கோலின் கீழ் சிறப்புறு வழியிலே மாறிய இச்செவ்வி, மற்றச் சுதேசநாட்டார் மைசூரைப்பார்த்து அதுபோல்தங்கள் நாடும் சிறக்கவேண்டுமென்று திருத்திக்கொள்வதற்கு ஊக்கமளிப்பதாகும். இந்தச் சமஸ்தானம் அழகொடு அறிவையும் குடிகளின் நலத்தையும் நாடுவதிலே கண்ணும் கருத்துமாய் இருக்கின்றது. இந்நாட்டை நான் நினைக்குங்கால், பண்டை நாள் வாழ்ந்த தத்துவ அறிவினால் சிறந்தோரான பெருமன்னர்களின் ஞாபகம் ஏற்படுகின்றது.

இனி இன்று எடுத்துக்கொண்டுள்ள விஷயத்தைத் தொடர்ந்து செல்வோம். ஜுபிளியை ஒட்டி ஏற்பாடான இந்நிகழ்ச்சியில், மனிதன் சுகத்திற்கும் அவன் தகுதியுடன் வாழ்வதற்குமான வழியொன்றைக்குறிக் கொள்ளும் விஷயமாய்ப் பேசவேண்டுமென்பது இப் பிரசங்க ஏற்பாடு செய்யப்பட்ட காலத்தில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனக்குமுன், இக்கூட்டத்தில் முதல் வருடம் ஸர். C. P. இராமஸ்வாமி ஐயரவர்களும் இரண்டாம் ஆண்டு ஸர். C. V. ராமன் அவர்களும் பேசினார்கள். 'அரசியல் செல்வாக்குப் பெற்ற பிடரல் இந்தியா' என்னும் விஷயமாய் முன்னவரும், 'எக்ஸ்ரேயும் கைத்தொழிலும்' என்னும் விஷயமாய்ப் பின்னவரும் பேசினார்கள். அரசியல் முறையும், சாஸ்திர முறையினதான கைத்தொழில் வளர்ச்சியும், மனித தகுதிக்கும் சுகத்திற்கும் உரியவெனின், அவை கருவியென்ற வளவிலேதான் பயன் அளிக்குமேயல்லாமல், தானே தனியிருந்து சுகத்தையும் தகுதியையும் நல்கிவைக்கும் செவ்வியைப் பெற்றவையல்லவென்பது என் கருத்து. அவை வேண்டுவதற்குரியதொன்றாயினும், வாழ்க்கை தனக்குரியதன்மையிலிருந்து நீங்கும்படி, சாஸ்திரமுறையதான கைத்தொழிலையும் அரசியல்முறையையும் அளவுகடந்து பற்றிக்கொளல் பயனுடையதாகாது. மதமும் (Religion) தத்துவமும், (Philosophy) மாந்தர்க்களிக்கும் நலங்களை அளவிடும் ஒரு அளவைக்கருவியென்ற வகையிலேதான் சாத்திரமும் அரசியலும் ஏற்றுக்கொள்ளத்தக்கவை என்பதே எனது அபிப்பிராயம்.

தற்காலம் இந்தியா இருக்கும் நிலைமையோடு இயைந்தபடி, மனித தகுதிக்கும் சுகத்திற்கும் தொடர்புள்ள விஷயத்தைப்பற்றி நான் இப்பொழுது பேசவேண்டும். இந்நாளில் உலகத்தில் எங்கெங்கும் மாந்தர் மனம் எதுவொன்றால் கவரப்பெற்றுளதோ, அது ஒன்றில் இந்தியரும் பற்றுவைத்துப் பின்தொடர்கின்றார். மிருகத்தன்மை போக்கி மனிதராக்க வேண்டுமென்பது விஞ்ஞான சாஸ்திரங்களின் நோக்கமாயினும் மனிதனே எந்திரமாய் மாறுகின்ற விந்தையை நாம் கண்ணால் காண்கின்றோம். அரசியலையும், தனதாய சாஸ்திரத்தையும் நாம் வரம்பு மீறிக் கொண்டாடுவதே, இவ்விபரீதத்திற்குக் காரணமாகும். இப்படிச்செய்வதால்,புத்தியின்பால்கொண்டுள்ள ஆதரத்தளவின்மிகைபற்றிப் புத்திக்கும் மேலான உள்ளத்தின்பால் ஆதரம் ஏற்படாமற்போகின்றது; அதனால் எஞ்சுவது இருபக்கமும் நிறையாத குறையுடைய நாகரிகமே. இந்நாகரிகம் பின் இக்கால வாழ்க்கையை இயந்திரச் சார்புடையதாய் இயற்றிவைக்கும் ஊக்கத்தை வளர்க்கின்றது.

ஆகையினால் தற்கால நிலையோ, ஆத்மமலர்ச்சிக்கு ஏற்றதொன்றாயில்லாமல் இருப்பதால், நாம் விரும்

பிய பொது நிலையைப் பெறாதவர்களாயிருக்கின்றோம்; நாமோ புறத்திலேயே பற்றுவைத்தவர்களாயிருக்கின்றோம். அப்படி நாம் இருக்கும் வரையில் வாழ்வு பொருளற்ற ஒரு வழக்கம் (Routine) ஆகும் நோக்கமே எஞ்சும். பலர் கூடிச்செய்தல் என்னும் ஏற்பாட்டின் எல்லைக்குப் புறமானது உள்ளவளர்ச்சி யென்பது. திட்டமும் ஏற்பாடும் இருக்கின்றவரை மனிதத்தன்மையென்பதை அழிப்பதற்கே நம்மிடம் எண்ணமிருக்கும். புத்தியின் வளர்ச்சியை நாம் இந்நாள்பெற்றுளோம் என்பது உண்மையே; ஆனால் பலநூற்றாண்டுகளுக்குமுன் வாழ்ந்தவர்களான நமது முன்னோர்களைப்போல் கண்ணோட்டமும் தண்ணளியும்உடையவர்களாய் நாம் இப்பொழுது இருக்கின்றோமா? துப்பாக்கியும் பீரங்கியும்கொண்டு பகைவரொடு போர்செய்யும் ஆற்றலைத்தான் நாம் இதுபொழுது பெற்றுள்ளோம்.

நேரான நாகரிகத்தில் பிடிப்பு வைத்தவர்களாயிருந்து, மனிதர்களாய் நாம் இப்பொழுது விவகரிக்கின்றோமோ என்று கேட்டுக்கொள்வோமானால், அக்கேள்விக்கு 'ஆம் இருக்கின்றோம்' என்றும், 'ஒழுக்கத்தால் உயர்ந்துள்ளோம்', என்றும் விடை கூற இயலாத பரிதாபநிலையில் நாம் இருக்கின்றோம். வாணிபப் பொருள்களை அளவிலாது உமிழ்ந்து வைக்கும் இயந்திரப் பெருக்கத்தாலும், யுத்தக் கப்பல்களின் தொகையினாலும், பரந்தகலும் ரயில்வேவளர்ச்சியாலும், அரசியல் ஏற்பாட்டாலும், நிர்ணயிக்கப்படுவதற்கானவொன்றன்று நாகரிகம். இயந்திரமும், தந்திரமும் நாகரிகத்தை வளருமாறு செய்வதற்குரிய சாதனங்களாகலாம், ஆனால், எந்நிறைவில் நாகரிகம் இருப்பதாகக் கருதப்படுகின்றதோ அந்நிறைவைத் தந்துவிடும் என்று கருதுவதற்காகா அவை. ஆன்ம வளர்ச்சி கைகூடஇயலாவகை நிறுவுகின்ற இந்தஇயந்திரநாகரிகமே நமதுநோக்கமென்றால், மனிதவியற்கையின் ஒருசிறந்த அம்சத்தைக் காற்றிலே தூற்றிவிட்டு நாம் விவகரிக்கின்றவர்களே யாவோம். புதியன தேடுமோர் மானுட இயற்கை ஒவ்வொருவரகத்துமிருக்கின்றது. அவ் வியற்கை, புதியபுதிய ஒன்றை எய்தும் புதிய வழிகளையும் சக்தியையும் அவாவுகின்றது. இன்றைக்கோ என்றால், ஒரேபடித்தானதாய் அவ்வியற்கை நிறுவப்படுகின்றது. ஆகவே, கைத்தொழில் அரசியல் என்ற புறமானவைகளுக்கு வேறான மதிப்புடைய ஒன்றை நாம் பற்றிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் ஏற்படுவதில்லை. பிடரல்இந்தியா என்பதுபற்றி ஒரு பிரசங்கமும், விஞ்ஞான சாஸ்திர முறையினில் கைத்தொழில் வளர்ச்சி பற்றி ஒரு பிரசங்கமும் இங்குக் கேட்டிருக்கின்றீர். எனவே நான், இன்று உள்ளிருந்து வளரும் நாகரிகத்தைப் பற்றி வற்புறுத்த வேண்டியது அவசியமாகும். மனித தகுதியையும் சுகத்தையும் பற்றியவரையில் தத்துவ ஆராய்ச்சியும் செய்யவேண்டிய வேலை உண்டு அன்னதற்கு மனிதனது உண்மையான இயற்கையை, அதாவது ஆத்ம அம்சத்தை நாம் முதன்முதல் நன்கு தெளியவேண்டும். மனிதனுடைய உடல் உரமும், புத்திசாதுர்யமும், மானுடதர்மத்தை நிறைத்துவிடா; அவை தெய்வசக்தியை மனிதனுள் மிளிரச் செய்திடத் துணைபுரியு மாற்றல் பெற்றனவல்ல. ஆத்மவிளக்கம் பெறுதலெனப்படும் ஒரு காரியத்திற்காக, மனிதன் முன்னம் தன்னைச் சோதித்து அறிந்து கொள்ள வேண்டும். அது அவ்வாறாகக் கீழ்நாட்டாராகிய இத்தேசத்தார், அகவாராய்ச்சியில் ஈடுபட்டு அதையேவற்புறுத்தி, மனிதனது எல்லா அம்சமும் நிறைவுறுவதற்கு அவசியமான புறத்துறு (அரசியல், பொருளாதார) பொருள்களை முற்றும் மறந்துவிட்டனர். இத்தேசத்தார் அகத்தையே கொண்டு புறத்தை மறந்தார். மேல்நாட்டார் புறத்திலேயே நாட்டம் வைத்து அகத்தினையே துறந்துவிட்டனர். எனவே இருபாலாரும் நாகரிகம் நிறைவுபடாது குறைவேபடும்படி ஒவ்வோர் அம்சத்தையே கைக்கொண்டனர். ஒழுக்கத்தின் விழுப்பத்தையும், உலகத்தில் ஒரு பொருத்தமும் கடமையும் ஒரு தர்மமும் உளவென்பதையும் நாம் அறியவேண்டுமானால், புறத்தினதானவொன்று அதற்கு உதவி புரியாது. இதைத் தெளியவேண்டுமானால் மேல்நாடும் கீழ்நாடும் தனித்தனி பெற்றுள அறிவு போதாது. முடிவான உண்மையைத் தெளிவதற்கானபடி, மானுட முழுஇயற்கையும், புத்தியும், உள்ளமும், உணர்வும் நேரானவாறு வளரும் வேறான அறிவுவேண்டும். மேல்நாடு புத்தியையே வற்புறுத்தலாகின்றது; கீழ்நாடோ உள்ளத்தறிவையே வற்புறுத்துகின்றது. இந்நிலையில் இப்பொழுது வேண்டுவது என்னவெனில், கீழ்நாட்டார் இயற்கையும் மேல்நாட்டார் இயற்கையும் ஒன்றுபட்டு இயைய வேண்டும். கலைகளிலும் விஞ்ஞானசாஸ்திரங்களிலும் மற்றச் சிருஷ்டித்தகுதி வேண்டிய விடங்களிலெல்லாம் இவ்வண்ணம் ஒன்றிய இயற்கை இன்றியமையாததே.

சாஸ்திரத் துணைகொண்டு புதிது புதிதாகக் கண்டுபிடிப்பதைத்தான் எடுத்துக்கொள்வோம். இயந்திர முயற்சியால் புதியன கண்டுபிடிக்கப்படுவதில்லை. புதியதாகக் கண்டுபிடிக்கலானவொன்று சிருஷ்டியேயன்றோ! கலைத்துறையில் செயற்கரிய சிருஷ்டிகளுக்குக் காரணம் அருள் என்று சொல்லப்படும் ஒரு சக்தியாகும். மனிதனது உள்ளம் ஊக்கமொடு பயிலும் பொழுதுதான் அந்த அருள் வெளியெழலாகின்றது. பக்திசெய்வதுபோன்ற பாவனையும் வேஷமும், உள்ளத்தை வளரவைத்து, ஒழுக்கத்தால் நம்மைச் சிறக்கச்செய்யும் என்று நீங்கள் மயங்கவேண்டா. நமது ஆன்மாவை இழந்துவிட்டு இவ்வுலக முழுவதையும் கட்டியாள்வதால் பயன்தான் என்ன? வழக்கமானபடி பழக்கத்தால் பயின்றுவரும் ஒருவனை, ஆன்மானுபவம் பெற்றவன் என்று யாராவது சொல்லுவார்களா?

இந்நாள் நாம், நமது உள்ளத்தின் ஒன்று மிலாமையை நடமாட்ட வேகத்தால் திரையிட்டு மறைத்துவிட்டுவாழ்வு என்னும்பேரைத்தான் பகர்ந்து வருகின்றோம். உண்மையில் நாம் வாழவில்லை. நீங்கள் நிறைவுடை வாழ்விலே சிறக்க வேண்டுமானால் உங்கள் ஒவ்வொருவரிடமுமுள்ள அகவுலகத்தில் குடைந்து ஆழ்ந்துவிட வேண்டும். உள்ளத்தின் அறிவினது தூய்மைதான் முடிவான மனிதசுகத்தைத் தரும். இதனால் அரசியலையும், கைத்தொழிலையும் சாஸ்திர அறிவையும் நான் தள்ளிவிடவில்லை. அவைகளும் அவசியந்தான். அவைகளைக் காட்டிலும் கலைஞானமும் தத்துவஞானமும், மிகவும் அவசியமானவை என்றே கூறுகின்றேன். உலக சுகத்திற்கு விஞ்ஞான சாஸ்திரங்கள் எப்படி அவசியமாகுமோ அப்படியே உலகத்தின் முக்திக்குத் தத்துவஞானம் அவசியமாகும்.

தனிப்பாடல்கள்.

நவாலி. கா. சோமசுந்தரம் பிள்ளை.

நாமகள் ஆசைப்பத்து.

யாழ்ப்பாணம் - திரு. க சோமசுந்தரம் பிள்ளை

மஞ்சுதவழ் நெடுங்குடுமி மாடக் கூடல்
மன்னுதமிழ்ச் சங்கமணித் தவிசின் மேவிப்
பிஞ்சுமதி வேணியனுங் குமர வேளும்
பெரியதவக் குறுமுனியும் பிறருஞ் சூழக்
கஞ்சமலர் மதிமுகமும் பவள வாயுங்
கயல்விழியுங் கமலமலர்த் தாளுங் கொண்டே
அஞ்சொலொரு மூன்றுமருள் தெய்வக் கோலம்
ஆசையுற்றே னினிக்காட்டி யருளு வாயே. 1

காதரிக்கப் பேசுபுற மொழிபோ லாது
கல்லினையு முருக்குமொழி கனிந்த வாயும்
பாதரித்த பணைத்தோளும் படிக மாலை
பனுவலியாழ் பரிக்குமொரு கரங்க ளுங்கும்
கோதரித்தென் தலைமிசையே குலவச் சூட்டுங்
கோகனகத் தாள்களுமாய்க் கூடி யன்பர்
ஆதரித்துப் போற்றுமருட் டெய்வக் கோலம்
ஆசையுற்றேன் இனிக்காட்டி யருளு வாயே. 2

எழுத்துவகை யீரைந்தும் முகம தாக
இயல்மொழியும் புணர்வுமிரு விழிக ளாக
வழுத்துமொரு சொன்னுன்குங் கரங்க ளாக
மருவுதொட ரியலரிபோ லிடைய தாகக்
கொழுத்துமிரு வகைப்பொருளுங் கொங்கை யாகக்
கூறுமியாப் பைவகையும் மொழிக ளாக
அழுத்தமுறு மணியணியாந் தெய்வக் கோலம்
ஆசையுற்றே னினிக்காட்டி யருளு வாயே. 3

வள்ளுவன்முப் பால்முடித்து மணிகள் சூட்டி
வளையினொடு குழையணிந்து மாலை வேய்ந்து
தெள்ளுதமிழ்த் தேவாரம் புனைந்து ஞானத்
திருக்கோவை பூண்டுமே கலையுஞ் சேர்த்தித்
தள்ளரும்வா சகம்பேசிச் சிலம்பு பூட்டித்
தளிரடிமேல் நாலடிப்பா துகையும் மாட்டி
அள்ளுமழ கொழுகவருந் தெய்வக் கோலம்
ஆசையுற்றே னினிக்காட்டி யருளு வாயே. 4

வாதளித்த புத்தனையு மூமை யாக்கி
மன்னன்மகள் மூங்கைதனை மாற்றிப் பஞ்ச
வேதனைக்குப் பொருளருளிப் பிணிகள் வீட்டி
விரிபசும்பொன் னாற்றெறிந்து குளத்தே கண்டு
சூதடுத்த சமணர்சுடர்க் கழுவி லேறச்
சுடுநெருப்பின் மீதேறித் தொண்டர் சூழ்ந்தே
ஆதரித்துப் போற்றவருள் தெய்வக் கோலம்.
ஆசையுற்றே னினிக்காட்டி யருளு வாயே. 5

வளவியதென் பொதியமலைச் சாரல் போகி
மறுபுலமங் கையர்சூழ மலர்பூக் கொய்தும்
பழகுபசுங் கிளிமிழற்றிக் குயிலைக் கூவிப்
பந்தடித்து மணியூசல் பரிவி னுந்தி
ஒழுகுசுனை நீர்குடைந்து வேங்கை நீழல்
ஒருமயில்கண் டடனடிக் கீதம் பாடி
அழகொழுக விளையாடுந் தெய்வக் கோலம்
ஆசையுற்றே னினிக்காட்டி யருளு வாயே. 6

மங்குலுறை வேங்கடமுங் குமரி யாறும்
வாரிதியும் நான்குபுடை மதில்க ளாக்கிச்
சங்கவள முறுகூடல் அரணஞ் சூழ்ந்த
தலைநகரா யறமுதலாந் தானை போற்றத்
துங்கமுடி மன்னர்திரு மேனி காக்கத்
தூயகவி வாணர்சொலுஞ் சொற்கோ லோச்சி
அங்கணுல குயிராளுந் தெய்வக் கோலம்
ஆசையுற்றே னினிக்காட்டி யருளு வாயே. 7

குழல்திருத்தி யலர்முடித்துத் திலதந் தீட்டிக்
கோவிரண்டும் மையெழுதிக் குழைகள் பூட்டி
வளையலிட்டுக் கச்சணிந்து வடங்கள் மாட்டி
மாசுதவிர் மேகலைபை மருங்கிற் கூட்டிப்
பழைபதமிழ்ச் சிலம்பணிந்து பட்டு டுத்திப்
பார்வையெட்டால் மலரயனர் பார்க்கப் பார்க்க
அழகொழுக அமுதொழுகுந் தெய்வக் கோலம்
ஆசையுற்றே னினிக்காட்டி யருளு வாயே. 8

மண்ணகத்தார் செவிவாயால் வாரி யுண்ண
வானகத்தார் வாயூறி மறுகுங் கோலம்
எண்ணகத்து மெழுத்தகத்து நிறைந்த கோலம்
இறையவன்வாய் மொழியிலிருந் தெழுந்த கோ[லம்
பண்ணகத்த வேழிசையாய்ப் பயின்ற கோலம்
பாவகத்து நாவகத்தும் பரவுங் கோலம்
அண்ணகத்துச் செழுஞ்சுடராந் தெய்வக் கோலம்
ஆசையுற்றே னினிக்காட்டி யருளு வாயே. 9

படிபுகழுங் கவிகாள மேக முன்னுட்
பராச னுடனிருக்கப் பரவுங் கோலம்
வடிதமிழா லடியெடுத்த மதுரங் கைப்ப
மறலிகண்டத் தாசுசொல வமைத்த கோலம்
கடிகமழ்தார் முடிமன்னன் வாரம் போகக்
காரினம்மண் மாரிபெயக் கனன்று மேனுள்
அடியெடுத்த சிலம்பொருவற் கருளுங் கோலம்
ஆசையுற்றே னினிக்காட்டி யருளு வாயே. 10

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,

நஞ்சன்கூடபல்பொடி நஞ்சன்கூடு.

யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜலக் கட்டிக்கும்



டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்ளுக்கு ரூ. (1-8-0)பிரான்சு:

டிப்போ, பம்பாய், கல்கத்தா

NANJANGUD TOOTH POWDER

மதுரை. காஞ்சீபுரம்.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[876-வது பக்கத் தொடர்ச்சி]

இதுவோ அன்னுய் நின்ற னியற்கை.

உரிமையை அறிந்தபின்னும் பரதன் தன்னரசைத் தமயனுக்கே அளிக்க நின்றுன் என்னுமாற்ருல் அவன்பெருமை யாதும் உயராமை உணரலாமேம். அம்மகன் உரிமையுடன் தன் கோவின் வாக்கினையும் காக்காமாறு கைகேயி வரமிரண்டையும் வியாஜமாக வைத்து விவகரித்தனள் என்னுது இமையவர் மாயச் சூத்திரத்தின் பாவையாயாடினுள் என்றக்கால் அவள் பெருமைக்கும் இயற்கைக்கும் யாதுங் குறைவு நேர்வதற்கில்லை. எனின் ஸ்ரீமான் பாரதியார் கொள்கையால் நிலைக்கப்பெற்ற ஊதியம் யாதெனக் காணலரியதாகின்றது. ஏதங்கொண்டு ஊதியம் போகவிடல் அறிவுடைத்தாகாதென வோரிடத்திற் சாற்றினுரவர். எனின், ஊதியமும் இல்லா ஏதங் கொளல் அவருடைய கருத்திற் கிசைந்த தாமோ!

வான்மீக முனிவர் என்னினைப்பின் என், என் செய்யின் என்—சுல்கச்சூளுண்மையும் கைகேயியின் கருத்தையும் தொடர்புபடுத்திய கம்பரும் தன் கதை கண்டிருப்பாராயின் அதனுல், பெரும்புகழ்த் தயாதனும், அவன் அவையினேரும் மனையினேரும் பழிசில சுமந்த பாவியர்களாதல் வேண்டுமே. மூவே மூலகமும் ஈன்றுனை யீன்றுனை யீன்றுளைக்குறித்து ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் பின்வரும் வண்ணம் கூறுகின்றுர்:—

"இனிப் பண்டறிகிழவி கைகேயி சீதனச் சேடியான கூனி கேகயத்தில் அரசன் அறச்சூளறிவளாகவே, அதை மறைக்கவிரும்பும் கோசலையாதியோர் வேந்தன் தன் சுல்கச்சூளறங் கொன்று இராமனுக்கு அரசுதர முயலுவதை அவளறியாது மறைக்க அவாவுகின்றனர். கைகேயி முன்னேரில் இதையறியாள் என்பது உய்த்துணரலாகும். மணவறையில் மணச்சடங்குகளுக்குமுன் வரனைக்காணல் ஆரிய வழக்கன்மையானும், சுல்கச்சூள் கைகேயிக்காகக் கேகயனிடம் தசரதனுற் செய்யப்பட்டதாக வான்மீகர் விசதமாக்குவதானும், கூனிவாயால் அதைக் கேட்டறியும்வரை பரதனுக்கு அரசாமாறில்லையென்று மறுத்து இராமன் அபிஷேகத்தை ஆமோதித்த கோமகள் மந்தரைவாயால் முன் வரலாறு கேட்டபிறகே அபிஷேகத்தைத் தடுக்க இசைந்துள்ளதானும், ஒன்று அவள்முன் அவ்விவரம் அறிகிலள், அன்றேல் அதனை மறந்தனள், என்பது வெள்ளிடைமலையா விளங்குவதாகும். ஒருகாற் பரதன்பாற் பரிவுடைய பிறர்யாரும் அதை யறிந்தவர், இராமனபிஷேக முயற்சி கண்டு, பரதன் சார்பாகவரக்கூடும்; அவ்வாறு எதிர்பாரா வண்ணம் யாராவது வருவரேல் அவர் முயற்சியை விலக்கி இராமனுக்கு அபிஷேக பூர்த்தியாக்க விரும்பியே அவனைச் சோர்வில் தோழராற் றற்காத்துக்கொள்ளும்படி அரசன் எச்சரிக்கலாயினன்.

கோசலையும் இப்பழஞ்சரிதம் அறிந்திருக்க வேண்டுமெனவே தோன்றுகிறது. அல்லளேல், வேந்தனைப்போலவே இவளும் இராமன் அரசெய்துவதற்கு ஊறுநேருமென்று அஞ்சக் காரணமில்லை. இவள் சேடிமார், இராமாபிஷேகத்தைச் சுமித்திரை யாதியோர்க் கறிவித்தழைத்தவர், கைகேயிக்கும் மந்தரை முதலிய அவள் சார்பினருக்கும் மட்டும் அதை மறைக்க விரும்பார். இராமனுக்கு இளவரசபிஷேகம் பிறப்புரிமை; அதனுல் அவனுக்கு அது திட்டமாகச் சித்திக்குமெனத் தெரிந்த கோப்பெருந்தேவி நிலைமைக்குமாருகக் கோசலை தன் மகனுக்கு அதைக் கூட்டுவிக்கப் பெரிதும் தான் ஆசையும் தாளாண்மையும் உடையவளாகவும், முடிவிற் றன்முயற்சி முற்றுப் பெறுங்காலம் அணுகிய துணர்ந்தபோது தன் அறிவாற்றலால் ஆக்கிய ஆக்கத்துக்கு அவள் தன் அறிவளவில் திளைத்துக் களித்ததாகவும், வான்மீகர் விசதாமாகவும் கம்பர் சிறிது விநயமாகவும் சுட்டியுள்ளனர். இராமனுக்கு அரசில்லை யெனக்கேட்டு அவள் அலக்கணுற்றரற்றியதா வடமொழிப் புலவர் அவளியல் விளங்க வழங்கி வைத்த படிற்றுரை பலவற்றைக் கம்பர் குறைத்து மறைத்தனர். பரதனுக்கு அரசுதர இசைந்த தன் தாதையைக் கொன்றேனும் சிறைசெறித்தேனும் தமயனுக்கு முடிபுனையப் போவதாய்க் கோபவெறிகொண்டு பிதற்றிய இளையவன் பீழைபடுமாற்றத்தைக் கடியாது கோசலை அதனைச் சிறிது செவியேற்குமாறு இராமனையும் தூண்டினதாயும், அதை மறுத்து இராகவன் அறமொழியெடுத்தோதி அறிவுறுத்திய பிறகே அவள் கணவனுக்குத் தான் கற்பறமாற்றுங் கடமையை நினைந்து அதற்கு இசைத்ததாயும், பின் பரதனைச் சந்தித்து நிந்தித்ததாயும் மெய்ம்மறையா வான்மீகர் கூறுகின்றுர். பரதனைப் பாராட்டிப் பேசி, அவனுக்கு ஆசிகூறி' அவன் பட்டாபிஷேகத்தை வெறுக்காமல் இராகவன் வனம்போகாது தன்னேடிருக்கமட்டும் வேண்டினளாகக் கம்பர் கோசலை குணத்தைச் சிறிதுமாற்றிச் செப்பனிட்டு மாற்றேற்றி வைத்துளார். கோசலை மன்னவன் சுல்க அறச்சூள் அறிந்திருக்கவேண்டுமெனச் சுட்டற்குரிய துணைச் சான்று இன்னுமொன்றுளது. இவ்வரலாற்றுண்மையை இராமனே பரதனுக்கு முதலில் வெளியிடுவதாக இருமொழிப் பெருங்கவிகளும் முறையே வலியுறுத்தக் காண்கின்றேம். தனக்குத் தந்தையார் முடிசூட முயன்றபோது இராமன் இஃதுணரா னென்பதே பொருத்தமாகும். முன்னரே பரதன் பிறப்புரிமையைத் தான் அறிந்திருப்பின், "செப்பருங்குணத் திராமன்" தந்தை விருப்பத்திற்கிணங்கி இத்துணை விபரீத விளைவுக்கு இடந்தரானன்றே? அறிந்து வைத்தும் அறத்துறை திறம்பிப் பரதனுக்குரிய அரசைத் தான் அடைய விரும்பினன், என்பது "தாய்மையுமன்றித் தருமமும் தழுவி நின்று" னியல்புக்கும் பெருங்குணத்துக்கும் பொருந்ததன்றே? பின் பரதனுக்கு இதை அவனே பகர்வதால், யார்மாட்டிதனை அவன் கேட்டறிந்தான்? தந்தையொடு தன் பட்டாபிஷேக விஷயமாய்ப் பேசிவந்த பின் நகர் நீங்கும்வரை தசரதனுடன் இராமன் மீண்டும் சல்லாபித்திலன் என்பர் கம்பர். இருவரையும் மூன்றுமுறை சந்திக்கச்செய்த வான்மீகரும், தசரதன் தநயனுக்கு இவ்விவரமறிவிக்க இடம்தரக் காணேம். அதனுல் வேந்தன் மூலம் இதனை இராமன் அறிந்தபாடில்லை. கோவிந்தராஜராதி உரைகாரர், சுமந்திராதிபரால் இராமன் இதைக் கேட்டிருக்கலாமென்று ஊகிக்கின்றனர். ஆனுல், தென்மொழி வடமொழிகளில் மன்னிய இருபெருங்காவியக் கதையும் சுமந்திராதியோர் இதனைச் சொல்லகில்லாமையைத் தெளித்து வைத்திருக்கின்றது. ஆகவே, பழமையுணர்ந்த தன் அன்னையாலாதல் அன்றேல் அவள் சார்பினராலாதல் இவ்வுண்மையை இராகவன் கேட்டிருக்கவேண்டுமென்று அறியக்கிடக்கின்றது.

கோசலைக்குச் சுல்கப்பழஞ்சரிதம் தெரிந்திருக்கவேண்டுமென்பது இன்னுமொருகாரணத்தாலும் ஊகிக்கலாகும். கைகேயி வரம்கேட்டு இராமாபிஷேகம் தடைப்பட்டபிறகு

"முன்னவனரசைப் பின்னவனுக்கு ஆக்குவது முறையன்று" என வசிட்டமுனியும் இலக்குவனும் சித்தார்த்தராதி மந்திரிமாரெல்லாரும் முழங்கவும், குணமணப்படுத்தப்பட்ட கம்பரின் கோசலைகூட (முதல் மகனிருக்க) அரசைப் பின்னவனுக்குக் கொடுப்பது "முறைமையன்றென்பதொன்றுண்டு" என்று இலேசாகச் சுட்டிப்போந்ததல்லாமல், அஃது அறமற்றதென்றேனும் பரதனுக்கு அது செல்லாதென்றேனும் சொன்னதில்லை. யாண்டும் தன்னியலிழவாத வான்மீகரின் கோசலையோ, கோபத்தாலும் தாபத்தாலும் அறிவுமயங்கினவிடத்தும், இறைவனைச் சீறிய இலக்குவன் "இன்னாச்சொல்லைத்" தனக்கு இதமெனிற் செவிக்கொளும்படி தன் தயனைத் தூண்டினளல்லால், இராமன் அரசை இளையபரதனுக்குத் தருவது அறமன்றென்று ஒரு வார்த்தையேனும் அவள் பிதற்றற் பிரலாபப் பிரஸ்தாபமுழுவதிலும் பேசாமை சிறிது சிந்திக்கத்தக்கதாம். பர்த்தாவையும் பரதனையும் பிற பல தூறி நொந்து கூறுமவள் பிறர்போல இதனைத் தவறெனச் சுட்டாமையால், பரதன் அரசுபெறுவது அறமற்றதென்றவள் கருதவில்லையென்று கொள்ளலாகும். இவ்வுண்மையறியாத இலக்குவனுக்கும் ஏனையருக்கும் பரதன் அரசுபெறுவது தவறாகவேபடுவது இயல்பாகலான் அவர்தம் உள்ளக் கிடையை அவ்வாறே வெளிப்படுத்திய வான்மீகர், உண்மையுணரவல்ல அறிவுடனாற்றல்சால் கோசலைவாயில் அனையசொல்லொன்றுங் கொடுத்திலர். பழைய சுல்கவரலாறறிந்தவளுளத்திற் பரதன் அரசெய்துவது அறத்துறையன்றெனத் தோன்றாதாகலானும், முறையெனவே தெரியுமாகலானும் வான்மீகருண்மைக் கோசலை தன்கோப தாபப் பிரலாபத்திலும் அதனை முறையன்றென மொழிந்தாளில்லைபோலும்.

இவை பலவாற்றானும், பண்டையறத்துறையிற் கைகேயிக்குச் சுல்கச்சீதனமான அயோத்தியரசு பரதனுக்கே பிறப்புரிமை; அதனை இராமன்பாலுய்க்கவிரும்பிய மன்னவனும் அவன் கோப்பெருந்தேவியுமே தவறிழைக்க விரும்பினவர்; தந்தவறுறத்துஞ் சிந்தையராகையால், அவ்விருவருக்கும் இடையூறு எழுமென்ற அச்சமும், பரதன் சார்பினரறியாமல் இராமாபிஷேகத்தை விரைவில் முடித்துவிடவேண்டுமென்ற வேட்கை வேகமும் கரை கடந்து கைம்மிகுந்தது; எனக் காண்போம்."

விழைவன கொண்டு வேண்டாதன விட்டுவிடும் மானத இயற்கையின் அசைவை இவ்வாசகத்தினுள்ளுங் காணலாமே. இனித் தயரதன் சூழ்ச்சிகளைப் பற்றி அவர் உரைப்பனவற்றையும் உடன் நோக்கலாம்:—

பரதனையும் கேகயன் முதலிய பரதன்பாற் பரிவுடையாரையும்பற்றி மட்டுமில்லை தயரதனுக்குண்டானபயம்; இராமனைப்பற்றியும் உளதாகும். இவன் பெருங்குணப் பெருமிதமுடையவன். அறத்தை மறத்தலும் துறத்தலும் அறியாச் சிந்தையன். அறக்கடவுளனைய பரதனியல்பைப் பாராட்டி அவன்பால் மதிப்பும் காதலும் மிகவுடையவன். தன்பால் அன்பாலேனும் தவறு நினைத்துழித் தம்பி இலக்குவனையும் தன் தாயையுமே தடுத்து, இடித்து, அறம் அறிவுறுத்தி நெறிநிறுத்த விரும்பும் நேர்மையும் திட்பமும் நிலைத்த சிந்தையன். பரதனோ தமயனைத் தந்தையினும் அதிகம் பாராட்டி அன்பு செய்பவன். இராமனுக்குரியதன்றென்று அவனால் அறமுறையிற் றெளிவிக்கப்பட்டபிறகும், தமயனுக்குத் தருவதற்காவது பற்றியே தரணி தன்னுடைமையானதற்கு மகிழ்ந்து, அதை அவனுக்கு விரும்பிச் சமர்ப்பித்துஉவப்பவன். அதனால், பரதனைப்பற்றி மன்னவன் பெரிதும் அஞ்சக் காரணமில்லை. கைகேயியும் இராமனிடத்து அன்பும் தன்பாற் கற்புநிறைக் காதலும் உடையவளாகவே, அவளைப்பற்றியும் அரசனுக்கு அச்சம் அதிகம் வேண்டா. அரசு பரதனுரிமையென்பதைச் சிறிதேனும் இராமன் அறிவனேல், பின் அதனை அவன் ஏற்கவொல்லான்; அவனையிணக்க யாராலும் ஆகாது. வைராக்கியமிகுந்த இராமன் குணமறிந்த தந்தை, அவனுக்குத் தன் தவறு வெளிப்பட்டுத் தனதெண்ணந் தடைப்படுமுன் அபிஷேகத்தை முடித்துவிட அவாவுகின்றான். முடிந்தபின் இராமன் அதை அழிக்கமுடியாமைகண்டு அடங்கியமைவன்: பரதன் அதைப் பெரிது முவப்பன். இறைமைக்கு உரிமைமேற்கொண்டிலற்குரிய இவ்விருவரும் அமையவே, 'முடிந்தது முறை' யெனும் அறமறியும் பரதன் பாங்கினரும் இராமன் முடிசூட்டை வெறுப்பினும் மறுக்க முயலார். தன் விருப்பம் இவ்வாறு நிறைவேறி, நிலையும் பெறுவதாகும். பூர்த்தியாகுமுன் பரதன் சார்பினர் அறிந்து தடுக்கநேரின், தன் முயற்சியனைத்தும் பாழாகும். உண்மை வெளிப்பட்டபின். பரதன் இசைவனேனும் இராமன் அரசேற்கச்சம்மதியான். பகிரங்கமாகத் தானும் சொல்லறந் துறக்கத் துணியுமாறில்லை. இவ்வுண்மையை ஊன்றியாராய்ந்து, விளையும் பயனும் விரும்பிக், காலமும் இடமும் கருதி இராமாபிஷேகத்தைத் தடுக்க வல்லாரறியாமல் வேகத்துடன் விரைவு பண்ணவும், சாமானியரால் ஒருகால் எனைத்தும் இடையே சிறுதடை நேரின் அதனை வலிகொண்டு அடக்கித் தன்விருப்பத்தைப் பூர்த்திபண்ணவும், வேந்தன் கருதியகாரியமும் அதற்குரிய கருவி கருமங்களும் எண்ணித் துணிகின்றான். தடுக்குந் தகையாளரைச் சேய்மையதாகிய கேகயத்தில் விலக்கிவைத்தும், பிறர் பரிவுடையார் இருப்பினும் அவருக்குத் துணையும் சார்பும் இல்லாதிருக்கத் தன் குடிகளொடுபெழகிய இராமனுக்கு வலியும் சூழ்ச்சியும் வழங்கியும் தன்விருப்ப முட்டின்றி முடிய வழியமைத்துக் கொள்கின்றான். தன் சபைக்குத் தனக்குவேண்டியவரை யழைப்பதிற் பல நாட்கழியப் பொறுத்தவன், சபையிற்றான் தன் விருப்பத்தை வெளியிட்டு அவர் சார்பும் துணையும் அறிந்தபிறகு சிறிதும் தாழத்தரியானாய், மறுநாளே அபிஷேகத்தை முடிக்கத் துணியலானான். இவை பலவாற்றானும், மன்னவனுளத்தில் தான் முற்றும் முறை செய்யவில்லையென்றுளதுணுக்கமும், எனைத்தானும் தன் விருப்பத்தை முடிக்கக் கொண்ட துணிவும் வேகமும் ஒருங்குடைமை விசதமாமன்றோ.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[876-வது பக்கத் தொடர்ச்சி]

இதுவோ அன்னாய் நின்ற னியற்கை.

உரிமையை அறிந்தபின்னும் பரதன் தன்னரசைத் தமயனுக்கே அளிக்க நின்றான் என்னுமாற்றால் அவன்பெருமை யாதும் உயராமை உணரலானேம். அம்மகன் உரிமையுடன் தன் கோவின் வாக்கினையும் காக்காமாறு கைகேயி வரமிரண்டையும் வியாஜமாக வைத்து விவகரித்தனள் என்னாது இமையவர் மாயச் சூத்திரத்தின் பாவையாயாடினாள் என்றக்கால் அவள் பெருமைக்கும் இயற்கைக்கும் யாதுங் குறைவு நேர்வதற்கில்லை. எனின் ஸ்ரீமான் பாரதியார் கொள்கையால் நிலைக்கப்பெற்ற ஊதியம் யாதெனக் காணலரியதாகின்றது. ஏதங்கொண்டு ஊதியம் போகவிடல் அறிவுடைத்தாகாதென வோரிடத்திற் சாற்றினாரவர். எனின், ஊதியமும் இல்லா ஏதங் கொளல் அவருடைய கருத்திற் கிசைந்த தாமோ!

வான்மீக முனிவர் என்னினைப்பின் என், என் செய்யின் என்—சுல்கச்சூளுண்மையும் கைகேயியின் கருத்தையும் தொடர்புபடுத்தியே கம்பரும் தன் கதை கண்டிருப்பாராயின் அதனால், பெரும்புகழ்த் தயரதனும், அவன் அவையினோரும் மனையினோரும் பழிசில சுமந்த பாவியர்களாதல் வேணுடுமே. மூவேமூலகமும் ஈன்றானை யீன்றானை யீன்றாளைக்குறித்து ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் பின்வரும் வண்ணம் கூறுகின்றார்:—

"இனிப் பண்டறிகிழவி கைகேயி சீதனச் சேடியான கூனி கேகயத்தில் அரசன் அறச்சூளறிவளாகவே, அதை மறைக்கவிரும்பும் கோசலையாதியோர் வேந்தன் தன் சுல்கச்சூளறங் கொன்று இராமனுக்கு அரசுதர முயலுவதை அவளறியாது மறைக்க அவாவுகின்றனர். கைகேயி முன் நேரில் இதையறியாள் என்பது உய்த்துணரலாகும். மணவறையில் மணச்சடங்குகளுக்குமுன் வரனைக்காணல் ஆரிய வழக்கன்மையானும், சுல்கச்சூள் கைகேயிக்காகக் கேகயனிடம் தசரதனாற் செய்யப்பட்டதாக வான்மீகர் விசதமாக்குவதானும், கூனிவாயால் அதைக் கேட்டறியும்வரை பரதனுக்கு அரசாமாறில்லையென்று மறுத்து இராமன் அபிஷேகத்தை ஆமோதித்த கோமகள் மந்தரைவாயால் முன் வரலாறு கேட்டபிறகே அபிஷேகத்தைத் தடுக்க இசைந்துள்ளதானும், ஒன்று அவள்முன் அவ்விவரம் அறிகிலள், அன்றேல் அதனை மறந்தனள், என்பது வெள்ளிடைமலையா விளங்குவதாகும். ஒருகாற் பரதன்பாற் பரிவுடைய பிறர்யாரும் அதை யறிந்தவர், இராமனபிஷேக முயற்சி கண்டு, பரதன் சார்பாகவரக்கூடும்; அவ்வாறு எதிர்பாரா வண்ணம் யாராவது வருவரேல் அவர் முயற்சியை விலக்கி இராமனுக்கு அபிஷேக பூர்த்தியாக்க விரும்பியே அவனைச் சோர்வில் தோழராற் றற்காத்துக்கொள்ளும்படி அரசன் எச்சரிக்கலாயினன்.

கோசலையும் இப்பழஞ்சரிதம் அறிந்திருக்க வேண்டுமெனவே தோன்றுகிறது. அல்லளேல், வேந்தனைப்போலவே இவளும் இராமன் அரசெய்துவதற்கு ஊறுநேருமென்று அஞ்சக் காரணமில்லை. இவள் சேடிமார், இராமாபிஷேகத்தைச் சுமித்திரை யாதியோர்க் கறிவித்தழைத்தவர், கைகேயிக்கும் மந்தரை முதலிய அவள் சார்பினருக்கும் மட்டும் அதை மறைக்க விரும்பார். இராமனுக்கு இளவரசபிஷேகம் பிறப்புரிமை; அதனால் அவனுக்கு அது திட்டமாகச் சித்திக்குமெனத் தெரிந்த கோப்பெருந்தேவி நிலைமைக்குமாறாகக் கோசலை தன் மகனுக்கு அதைக் கூட்டுவிக்கப் பெரிதும் தான் ஆசையும் தாளாண்மையும் உடையவளாகவும், முடிவிற் றன்முயற்சி முற்றுப் பெறுங்காலம் அணுகியதுணர்ந்தபோது தன் அறிவாற்றலால் ஆக்கிய ஆக்கத்துக்கு அவள் தன் அறிவளவில் திளைத்துக் களித்ததாகவும், வான்மீகர் விசதமாகவும் கம்பர் சிறிது விநயமாகவும் சுட்டியுள்ளனர். இராமனுக்கு அரசில்லை யெனக்கேட்டு அவள் அலக்கணுற்றரற்றியதா வடமொழிப் புலவர் அவளியல் விளங்க வழங்கி வைத்த படிற்றுரை பலவற்றைக் கம்பர் குறைத்து மறைத்தனர். பரதனுக்கு அரசுதர இசைந்த தன் தாதையைக் கொன்றேனும் சிறைசெறித்தேனும் தமயனுக்கு முடிபுனையப் போவதாய்க் கோபவெறிகொண்டு பிதற்றிய இளையவன் பிழைபடுமாற்றத்தைக் கடியாது கோசலை அதனைச் சிறிது செவியேற்குமாறு இராமனையும் தூண்டினதாயும், அதை மறுத்து இராகவன் அறமொழியெடுத்தோதி அறிவுறுத்திய பிறகே அவள் கணவனுக்குத் தான் கற்பறமாற்றுங் கடமையை நினைந்து அதற்கு இசைந்ததாயும், பின் பரதனைச் சந்தித்து நிந்தித்ததாயும் மெய்ம்மறையா வான்மீகர் கூறுகின்றார். பரதனைப் பாராட்டிப் பேசி, அவனுக்கு ஆசிகூறி அவன் பட்டாபிஷேகத்தை வெறுக்காமல் இராகவன் வனம்போகாது தன்னோடிருக்கமட்டும் வேண்டினளாகக் கம்பர் கோசலை குணத்தைச் சிறிதுமாற்றிச் செப்பனிட்டு மாற்றேற்றி வைத்துளார். கோசலை மன்னவன் சுல்க அறச்சூள் அறிந்திருக்கவேண்டுமெனச் சுட்டற்குரிய துணைச் சான்று இன்னுமொன்றுளது. இவ்வரலாற்றுண்மையை இராமனே பரதனுக்கு முதலில் வெளியிடுவதாக இருமொழிப் பெருங்கவிகளும் முறையே வலியுறுத்தக் காண்கின்றோம். தனக்குத் தந்தையார் முடிசூட முயன்றபோது இராமன் இஃதுணரானென்பதே பொருத்தமாகும். முன்னரே பரதன் பிறப்புரிமையைத் தான் அறிந்திருப்பின், "செப்பருங்குணத் திராமன்" தந்தை விருப்பத்திற்கிணங்கி இத்துணை விபரீத விளைவுக்கு இடந்தரானன்றோ? அறிந்து வைத்தும் அறத்துறை திறம்பிப் பரதனுக்குரிய அரசைத் தான் அடைய விரும்பினன், என்பது "தாய்மையுமன்றித் தருமமும் தழுவி நின்றா" னியல்புக்கும் பெருங்குணத்துக்கும் பொருந்தாதன்றே? பின் பரதனுக்கு இதை அவனே பகர்வதால், யார்மாட்டிதனை அவன் கேட்டறிந்தான்? தந்தையொடு தன் பட்டாபிஷேக விஷயமாய்ப் பேசிவந்த பின் நகர்நீங்கும்வரை தசரதனுடன் இராமன் மீண்டும் சல்லாபித்திலன் என்பர் கம்பர். இருவரையும் மூன்றுமுறை சந்திக்கச்செய்த வான்மீகரும், தசரதன் தயனுக்கு இவ்விவரமறிவிக்க இடந்தரக் காணேம். அதனால் வேந்தன் மூலம் இதனை இராமன் அறிந்தபாடில்லை. கோவிந்தராஜராதி உரைகாரர், சுமந்திரராதியரால் இராமன் இதைக் கேட்டிருக்கலாமென்று ஊகிக்கின்றனர். ஆனால், தென்மொழி வடமொழிகளில் மன்னிய இருபெருங்காவியக் கதையும் சுமந்திராதியோர் இதனைச் சொல்லகில்லாமையைத் தெளித்து வைத்திருக்கின்றது. ஆகவே, பழமையுணர்ந்த தன் அன்னையாலாதல் அன்றேல் அவள் சார்பினராலாதல் இவ்வுண்மையை இராகவன் கேட்டிருக்கவேண்டுமென்று அறியக்கிடக்கின்றது.

கோசலைக்குச் சுல்கப்பழஞ்சரிதம் தெரிந்திருக்கவேண்டுமென்பது இன்னுமொருகாரணத்தாலும் ஊகிக்கலாகும். கைகேயி வரம்கேட்டு இராமாபிஷேகம் தடைப்பட்டபிறகு

"முன்னவனரசைப் பின்னவனுக்கு ஆக்குவது முறையன்று" என வசிட்டமுனியும் இலக்குவனும் சித்தார்த்தராதி மந்திரிமாரெல்லாரும் முழங்கவும், குணமணப்படுத்தப்பட்ட கம்பரின் கோசலைகூட (முதல் மகனிருக்க) அரசைப் பின்னவனுக்குக் கொடுப்பது "முறைமையன்றென்பதொன்றுண்டு" என்று இலேசாகச் சுட்டிப்போந்ததல்லாமல், அஃது அறமற்றதென்றேனும் பரதனுக்கு அது செல்லாதென்றேனும் சொன்னதில்லை. யாண்டும் தன்னியலிழவாத வான்மீகரின் கோசலையோ, கோபத்தாலும் தாபத்தாலும் அறிவுமயங்கினவிடத்தும், இறைவனைச் சீறிய இலக்குவன் "இன்னாச்சொல்லைத்" தனக்கு இதமெனிற் செவிக்கொளும்படி தன் தநயனைத் தூண்டினளல்லால், இராமன் அரசை இளையபரதனுக்குத் தருவது அறமன்றென்று ஒரு வார்த்தையேனும் அவள் பிதற்றற் பிரலாபப் பிரஸ்தாபமுழுவதிலும் பேசாமை சிறிது சிந்திக்கத்தக்கதாம். பர்த்தாவையும் பரதனையும் பிற பல தூறி நொந்து கூறுமவள் பிறர் போல இதனைத் தவறெனச் சுட்டாமையால், பரதன் அரசுபெறுவது அறமற்றதென்றவள் கருதவில்லையென்று கொள்ளலாகும். இவ்வுண்மையறியாத இலக்குவனுக்கும் ஏனையருக்கும் பரதன் அரசுபெறுவது தவறாகவேபடுவது இயல்பாகலான் அவர்தம் உள்ளக் கிடையை அவ்வாறே வெளிப்படுத்திய வான்மீகர், உண்மையுணரவல்ல அறிவுடை ஞற்றல்சால் கோசலைவாயில் அனையசொல்லொன்றுங் கொடுத்திலர். பழைய சுல்கவரலாறறிந்தவளுளத்திற் பரதன் அரசெய்துவது அறத்துறையன்றெனத் தோன்றாதாகலானும், முறையெனவே தெரியுமாகலானும் வான்மீகருண்மைக் கோசலை தன்கோப தாபப் பிரலாபத்திலும் அதனை முறையன்றென மொழிந்தாளில்லைபோலும்.

இவை பலவாற்றானும், பண்டையறத்துறையிற் கைகேயிக்குச் சுல்கச்சீதனமான அயோத்தியரசு பரதனுக்கே பிறப்புரிமை; அதனை இராமன்பாலுய்க்கவிரும்பிய மன்னவனும் அவன் கோப்பெருந்தேவியுமே தவறிழைக்க விரும்பினவர்; தந்தவ றுறத்துஞ் சிந்தையராகையால், அவ்விருவருக்கும் இடையூறு எழுமென்ற அச்சமும், பரதன் சார்பினரறியாமல் இராமாபிஷேகத்தை விரைவில் முடித்துவிடவேண்டுமென்ற வேட்கை வேகமும் கரை கடந்து கைம்மிகுந்தது; எனக் காண்போம்."

விழைவன கொண்டு வேண்டாதன விட்டுவிடும் மானத இயற்கையின் அசைவை இவ்வாசகத்தினுள்ளுங் காணலாமே. இனித் தயரதன் சூழ்ச்சிகளைப் பற்றி அவர் உரைப்பனவற்றையும் உடன் நோக்கலாம்:—

'பரதனையும் கேகயன் முதலிய பரதன்பாற் பரிவுடையாரையும்பற்றி மட்டுமில்லை தயரதனுக்குண்டானபயம்; இராமனைப்பற்றியும் உளதாகும். இவன் பெருங்குணப் பெருமிதமுடையவன். அறத்தை மறத்தலும் துறத்தலும் அறியாச் சிந்தையன். அறக்கடவுளனைய பரதனியல்பைப் பாராட்டி அவன்பால் மதிப்பும் காதலும் மிகவுடையவன். தன்பால் அன்பாலேனும் தவறு நினைத்துழித் தம்பி இலக்குவனையும் தன் தாயையுமே தடுத்து, இடித்து, அறம் அறிவுறுத்தி நெறிநிறுத்த விரும்பும் நேர்மையும் திட்பமும் நிலைத்த சிந்தையன். பரதனோ தமயனைத் தந்தையினும் அதிகம் பாராட்டி அன்பு செய்பவன். இராமனுக்குரியதன்றென்று அவனால் அறமுறையிற் றெளிவிக்கப்பட்டபிறகும், தமயனுக்குத் தருவதற்காவது பற்றியே தரணி தன்னுடைமையானதற்கு மகிழ்ந்து, அதை அவனுக்கு விரும்பிச் சமர்ப்பித்துஉவப்பவன். அதனால், பரதனைப்பற்றி மன்னவன் பெரிதும் அஞ்சக் காரணமில்லை. கைகேயியும் இராமனிடத்து அன்பும் தன்பாற் கற்புநிறைக் காதலும் உடையவளாகவே, அவளைப்பற்றியும் அரசனுக்கு அச்சம் அதிகம் வேண்டா. அரசு பரதனுரிமையென்பதைச் சிறிதேனும் இராமன் அறிவனேல், பின் அதனை அவன் ஏற்கவொல்லான்; அவனையிணக்க யாராலும் ஆகாது. வைராக்கியமிகுந்த இராமன் குணமறிந்த தந்தை, அவனுக்குத் தன் தவறு வெளிப்பட்டுத் தனதெண்ணந் தடைப்படுமுன் அபிஷேகத்தை முடித்துவிட அவாவுகின்றான். முடிந்தபின் இராமன் அதை அழிக்கமுடியாமைகண்டு அடங்கியமைவன்: பரதன் அதைப் பெரிதுவப்பன். இறைமைக்கு உரிமைமேற்கொண்டிலற்குரிய இவ்விருவரும் அமையவே, 'முடிந்தது முறை' யெனும் அறமறியும் பரதன் பாங்கினரும் இராமன் முடிசூட்டை வெறுப்பினும் மறுக்க முயலார். தன் விருப்பம் இவ்வாறு நிறைவேறி, நிலையும் பெறுவதாகும். பூர்த்தியாகுமுன் பரதன் சார்பினர் அறிந்து தடுக்கநேரின், தன் முயற்சியனைத்தும் பாழாகும். உண்மை வெளிப்பட்டபின். பரதன் இசைவனேனும் இராமன் அரசேற்கச்சம்மதியான். பகிரங்கமாகத் தானும் சொல்லறந் துறக்கத் துணியுமாறில்லை. இவ்வுண்மையை ஊன்றியாராய்ந்து, வினையும் பயனும் விரும்பிக், காலமும் இடமும் கருதி இராமாபிஷேகத்தைத் தடுக்க வல்லாரறியாமல் வேகத்துடன் விரைவு பண்ணவும், சாமானியரால் ஒருகால் எனைத்தும் இடையே சிறுதடை நேரின் அதனை வலிகொண்டு அடக்கித் தன்விருப்பத்தைப் பூர்த்திபண்ணவும், வேந்தன் கருதியகாரியமும் அதற்குரிய கருவி கருமங்களும் எண்ணித் துணிகின்றான். தடுக்குந் தகையாளரைச் சேய்மையதாகிய கேகயத்தில் விலக்கிவைத்தும், பிறர் பரிவுடையார் இருப்பினும் அவருக்குத் துணையும் சார்பும் இல்லாதிருக்கத் தன் குடிகளொடுபழகிய இராமனுக்கு வலியும் சூழ்ச்சியும் வழங்கியும் தன்விருப்ப முட்டின்றி முடிய வழியமைத்துக் கொள்கின்றான். தன் சபைக்குத் தனக்குவேண்டியவரை யழைப்பதிற் பல நாட்கழியப் பொறுத்தவன், சபையிற்றான் தன் விருப்பத்தை வெளியிட்டு அவர் சார்பும் துணையும் அறிந்தபிறகு சிறிதும் தாழத்தரியானாய், மறுநாளே அபிஷேகத்தை முடிக்கத் துணியலானான். இவை பலவாற்றானும், மன்னவனுளத்தில் தான் முற்றும் முறை செய்யவில்லையென்றுணர் துணுக்கமும், எனைத்தானும் தன் விருப்பத்தை முடிக்கக் கொண்ட துணிவும் வேகமும் ஒருங்குடைமை விசதமாமன்றோ.

வர்த்தமானம்

'இவ்வருஷம் டிசம்பர்மாதக் கடைசியில், சென்னையில் அகிலஇந்தியச் சங்கீதமஹாநாடு நடைபெறும். கார்ப்பொரேஷன் கமிஷனர், பீபில்ஸ்பார்க்கில் மஹாநாட்டுக் கொட்டகை அமைத்துக்கொள்ள அனுமதி தந்துள்ளார். இரண்டாயிரம்பேருக்கு வசதி இருக்குமாறு கொட்டகை அமைக்கப்படும். திருவாங்கூர் இளைய மஹாராணியார் மஹாநாட்டைத் திறந்து வைப்பார்' என்று சென்னைச் சங்கீதகழகத்தார் அறிவிக்கின்றனர்.

***

சென்றவாரம் கூடிய பார்லிமெண்டு கூட்டத்தில், வேலையில்லாத் திண்டாட்ட விஷயமாய் நடந்த வாதத்தில் லிபரல் கட்சியாருக்குள் பிளவு ஏற்பட்டது. லிபரல் கட்சியினரான ஸர் ஜான் சைமன், ஸர் ராபர்ட் ஹட்கின்ஸன் இவர்களும் வேறுமூவரும் அரசாங்கத்திற்கு விரோதமாய் இவ்விஷயத்தில் ஓட் செய்தனர். லிபரல் கட்சியினரான மற்றநால்வர் அரசாங்கத்தின் சார்பாக ஓட் செய்தனர். அதன் பயனாகக் கட்சியில் பிளவு ஏற்பட்டது. ஸர் ராபர்ட் ஹட்கின்ஸன் கன்சர்வெடிவ் கட்சியில் சேர்ந்துகொள்ள விருக்கின்றார் என்றும், லிபரல்கட்சியில் அவர் வகித்த 'விப்' என்னும் ஸ்தானத்தை ராஜிநாமாச் செய்துவிட்டார் என்றும் தெரிகின்றது.

***

ஸர் ஜான் சைமன் ஒருவாரத்திற்குமுன் மிஸ்டர் லாயிட் ஜியார்ஜிற்கு எழுதிய கடிதமொன்று இப்பொழுது வெளியாயிருக்கின்றது. அதில் அவர் தொழிற்கட்சியார் கவர்ன்மெண்டு தோல்வியுற்றதென்றும், அடிக்கடி தொழிலாளர் நெருக்கடி ஏற்படுகின்றதென்றும், தொழில்சச்சரவு திட்டத்திருத்த விஷயமாய்த் தான் அரசாங்கத்திற்குச் சாதகமாய் ஓட் செய்யமுடியாதென்றும், அறிவித்திருக்கிறார்.

இந்தநிலையில் தொழிற்கட்சி கவர்ன்மெண்டு வேலை செய்யமுடியாது. மறுபடியும் பொதுத் தேர்தல் நடந்தாலும் நடக்கலாம். எனவே தங்கள் நிலைமையை அடுத்த தேர்தலில் வலிவுள்ளதாகச் செய்யத் தொழிற் கட்சியார் ஒரு நிதி சேகரித்துவருகின்றனர் என்று லண்டன் செய்தி தெரிவிக்கின்றது.

***

கும்பகோணம் முனிஸிபல் சேர்மனும் அட்வகேட்டுமான ஸ்ரீமான் என் திருவேங்கடத்தையங்கார் எழுதுவதாவது:—

சமீப வெள்ளமும் தஞ்சை டெல்டாவில் அதனாலேற்பட்ட சேதமும் காவிரி டெல்டாப் பிரச்னைகளை மீண்டும் பிரபலத்திற்குக் கொண்டுவந்துவிட்டன.

வெள்ளத்தால் அறுவடைக்குத் தயாராக விருந்த குருவையில் பாதிபாகம் அறுவடை செய்யப்படாமலே வயலில் விடப்படுமாறு நேர்ந்தது. புதிதாக நடப்பட்ட சம்பாப்பயிர் இரண்டுவாரத்திற்கு மேலாக ஜலத்தில் மூழ்கியிருக்கிறது. இரண்டாவது போகத்திற்கான நாற்றுக்கள்சேதமாகிவிட்டன. இதன் பலன் பின்னால் என்னவாகு மென்று கடவுளுக்குத்தான் தெரியும். மொத்தத்தில் $3\frac{1}{2}$லக்ஷம் கலம் குருவைநெல்லும் 75லட்சம் கலம் சம்பா நெல்லும் நஷ்டமேற்பட்டிருக்குமென்று மதிப்பிடப்படுகிறது. கலம் ரூ.1-12-0 வீதம் வைத்துக்கொண்டாலும் விவசாயிகளுக்கு 1,37,57,000ரூபா நஷ்டமேற்பட்டிருக்கும். இதைத் தவிர, பல ரஸ்தாக்களும் கிராமப் போக்குவரத்துக்களும் சேதமடைந்திருக்கின்றன. பலர் வீடுகளையிழந்துவிட்டனர். கால்நடைகளுக்கு அதிக சேதமேற்பட்டிருக்கிறது. ரயில்பாதைக்கும் சேதமேற்பட்டிருக்கிறது. பொதுவேலை அதிகமாகப் பாதிக்கப்பட்டு வியாபாரமும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

கல்லணைக்கு மேற்கே அதிகப்படி வெள்ளத்தைக் கொள்ளிடத்தில் விடுமாறு போதுமான ஏற்பாடு செய்ய முடியாதா? 1927 ஜுலையில் அப்போது பாசன மெம்பராக விருந்த ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயரின் தலைமையில் நடந்த தஞ்சை திருச்சி ஜில்லா மிராசுதார்களின் மகாநாட்டில் தஞ்சை சர்க்கிள் சூப்பரின்டெண்டிங் இஞ்சினீர் இந்தப் பிரச்னைகளை விவாதித்து (1) வெள்ளமும் அதைப் பைசல் செய்வதும் (2) வெள்ளத்திலிருந்து பாதுகாப்பு (3) வடிகால் ஆகிய விஷயங்களை முக்கியமாக வற்புறுத்தினார். டெல்டாவைப் பாதுகாக்க வேண்டுமானால் அதிகப்படி வெள்ளத்தைக் கொள்ளிடத்தில் திருப்பிவிட கல்லணைக்கு மேற்கே தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று அவர் வற்புறுத்தியதுடன் விநாடிக்கு 50,000 கன அடி ஜலத்தைச் சமாளிக்கக் கல்லணை, மணற்போக்கி, மதகு, ரஸ்தா அணை இவற்றைத் தவிர ஒரு அதிகப்படி வெள்ள மதகு வேண்டுமென்று எடுத்துக்காட்டி அதற்கான திட்டத்தைத் தாம் சமர்ப்பித்திருப்பதாகக் கூறினார். கல்லணையில் வெள்ளத்தைத் தள்ளுவதற்கு அவர் யோசனை கூறிய இதர இனங்களுடன் இதுவும் ஒன்றாகும்.

அந்த யோசனைகள் என்னவாயினவென்று தெரியவில்லை. டெல்டாவைப் பாதுகாப்பதற்காகக் கூறப்பட்ட திட்டங்கள் ஏன் மேலே நடத்திவைக்கப்படவில்லை? அந்தத் திட்டங்கள் சரியாக நடத்தி வைக்கப்பட்டிருந்து காவிரிக் கமிட்டி யாதாஸ்தில் கூறப்பட்ட எல்லா யோசனைகளும் நடத்திவைக்கப்பட்டிருந்தால் டெல்டா பாதுகாக்கப்பட்டிராதா? அல்லது சேதம் மிகவும் குறைந்திராதா?

மாயவரம் முத்துப்பேட்டை ரயில்பாதையில் ஜலம் ஓடுவதற்குப் போதுமான மதகுகள் கட்டப்பட்டிருந்தால் அங்குப் பல உடைப்புக்கள் ஏற்பட்டிருக்கமாட்டா; சேதமும் தவிர்க்கப்பட்டிருக்கும். மாயவரம் முத்துப்பேட்டைப் பாதையோரமாக நிலங்களையுடைய மிராசுதார்கள் தெரிவித்துக்கொண்டதன் பேரில் ஜலம் ஓடுவதற்குப் போதுமான மதகுகள் இல்லாத விஷயம் சமீபத்தில் ஆராயப்பட்டது. ஆனால் ஒன்றும் நடத்திவைக்கப்படவில்லை.

ஆகையால் சமீப சம்பவத்திலிருந்து 1920, 1924, 1930-ம் வருஷங்களில் நேர்ந்ததுபோன்ற வெள்ளங்கள் அடிக்கடி யேற்படுபவை என்று ருஜுவாகிவிட்டது. இம்மந்திரி அதிக வெள்ளம் எப்போதாவது ஏற்படுவதாயும், ஆகவே டெல்டாவைப் பாதுகாப்பதற்காகப் பெரிய திட்டங்கள் நடத்தி வைக்கவேண்டியதில்லையென்றும் நினைத்துக் கவர்ன்மெண்டார் டெல்டாவுக்கு வெளியில் வெள்ளத்தைத் திருப்பிவிட ஏற்பாடு செய்யாமலிருப்பது பெரிய குற்றமும் முட்டாள்தனமுமாகும். ரயத்துகளுக்கு நேர்ந்திருக்கும் நஷ்டத்தையும் தேசத்திற்கு நேர்ந்திருக்கும் நஷ்டத்தையும் மதிப்பிட்டுப் பார்த்தால் டெல்டாவின் பிரச்னைகளை இனிமேல் ஒத்திவைக்க முடியாதென்பது வியக்தமாக ருஜுவாகும். அதிர்ஷ்டவசமாக எல்லாப் பிரச்னைகளும் ஆராயப்பட்டுப் பரிகாரங்களும் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் வேலையை நடத்துவதும் யோசனைகளை அனுமதிப்பதும் அவ்வப்போது ஒத்திவைக்கப்பட்டோ கைவிடப்பட்டோ வந்திருக்கின்றன.

ஆகையால் பின்கண்ட விஷயங்களை உடனே கவனிக்கவேண்டியது. (1) மேட்டுப் பிரதேச ஜலம் வெண்ணாற்றில் வடியும் விஷயம். (2) டெல்டாவிற்குள் வெள்ளம் வராமல் தடுக்க அதிகப்படி வெள்ளத்தைக் கொள்ளிடத்தில் திருப்பிவிடுமாறு கல்லணைக்கு மேலே போதுமான ஏற்பாடு செய்வது. (3) ரயில் பாதைகளில் நீர்ப்போக்கிகளை விசாலப்படுத்துவது.

"சுதேசமித்திரன்"

KALANILAYAM. REG. NO. M, 2324.

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (உதாரணங்க ளுடன்)—மூன்று பாகம் ... ரூ. 18 அ. 8

தமிழ்மொழி அகராதி
The Coronation Tamil Dictionary 10 0

தமிழ் - தமிழ் - இங்கிலீஷ் அகராதி.
வி. விச்வநாதபிள்ளை இயற்றியது :: 676 பக்கங்கள்

எல்லாப் பதங்களுக்கும் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு சொல்லுக்கு மிருக்கிற பல பொருள்களும் அவைகளுக்கு நேர் நேரே ஆங்கில மொழிபெயர்ப்பும் கொண்டது. வி. பி. செலவு வேறு. விலை ரூபா 6 0 0.

:: திருக்குறள் ::

மூலமும், சொற்குறிப்பு அகராதியும், விஷய ஒப்புக் குறளும்; வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300-பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப்படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதன் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

வி. பி. செலவு வேறு. விலை அணு 12.

கலாநிலயம்,
11, வேளாளர் தெரு, புரசை, சென்னை.

நன்கறிந்த ஜீவன் - - - - - - சியவன் ப்ராஷ்

நிகரற்ற ஆயுர்வேத டானிக். இருமல், சளி,

ஆஸ்த்மா, டிதிவிஸ் முதலிய வியாதிகளுக்கு நல்ல மருந்து. இரத்தத்தை விருத்திசெய்து ஞாபகசக்தியைக் கூர்மைப் படுத்தும். நீண்ட ஆயுளும் தேக ஆரோக்கியமும் நல்ல சக்தியும் தரவல்லது.

விலை:—1 பவுன் ரூ. 2-8-0. ½ பவுன் ரூ. 1-5-0. பாகிங் தபால் செலவுகள் வேறு.

குஜராட் ஆயுர்வேத பார்மஸி, அகமதாபாத்; என்னுமிடத்தில் செய்யப்பட்டது.

லோகல் ஏஜெண்ட்ஸ்:—

சீதாராம் மெடிகல் ஸ்டோர்ஸ்,
87. நயனியப்ப நாயகன் தெரு,
பார்க் டவுன், சென்னை.

குறிப்பு:—மெடிகல் அட்வைஸ் இனமாகக் கொடுக்கப்படும். பதிலிற்கு ஒரு அணு தபால் தலை அனுப்பவும். கார்டாக் இனம்.

ஒட்டக்கூத்தர் பாடிய **தக்கயாகப் பரணி** மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு.

(உரையுடன்)

இதுவரையில் அச்சேறாத இவ்வரியநூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு.

விலாசம் :—கலாநிலயம்: 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,
சே. கிருஷ்ணமாசாரியார்,
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

பால காண்டம் ...	ரூ.	5.
அயோத்தியா காண்டம்	ரூ.	5.
ஆரண்ய காண்டம் ...	ரூ.	4.
கிஷ்கிந்தா காண்டம் ...	ரூ.	4-8.
சுந்தர காண்டம் ...	ரூ.	5.

(வி.பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய
கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள்ள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில்உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—"கலா நிலயம்",
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)